விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 17 வியாழக்கிழமை (02.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226

# வடக்கு காணிகளை விடுவிக்க நடவடிக்கை

## வடக்கு முதலமைச்சரிடம் இராணுவத் தளபதி உறுதி



(யாழ்ப்பாணம்) இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு துரித கதியில் நடவடிக்கை எடுப்பதாக இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க, வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனிடம் உறுதியளித்துள்ளார். (23-ம் பக்கம்...)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த டெட்டனேட்டர்களுடன் 6 பேர் தமிழகத்தில் அதிரடியாக கைது!

(சென்னை)

இலங்கைக்கு கடத்த முயற்சிக்கப்பட்ட 5 ஆயிரத்து 600 டெட்டனேட்டர்களுடன் 6 பேர், தமிழகம் இராமேஸ்வரம் அருகில் உள்ள சேராங்கோட்டை கடற்கரைப் பகுதியில் கைது செய் 23☛

விருந்தில் கலந்து கொண்ட

## வவுனியா இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை



(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் விருந்தில் கலந்து கொண்ட இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா மாதர்பனிக்கர் மகிழங்குளம் பகுதியை சேர்ந்த 23☛

நல்லூர் திருவிழா காலத்தில்

## பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனை முற்றாகத் தடை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவிழா காலத்தில் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனை முற்றுமுழுதாக தடைசெய்யப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு 30க்கும் அதிகமான கமராக்கள் பொருத்தப்பட்டு 24 மணிநேரமும் கண்காணிப்பு நடவ 24☛

## முன்னாள் போராளிக்கு அச்சுறுத்தல்

பொலிஸார் அசமந்தம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களால் அச்சுறுத்தப்பட்ட முன்னாள் போராளியின் முறைப்பாட்டை பொலிஸார் அலட்சியத்துடன் கையாண்டதாக முன்னாள் போராளி ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். 23☛

## வயிற்றை வெட்டிய குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வயிற்று வலி தாங்க முடியாமல் வயிறை பிளேட்டினால் வெட்டிய குடும்பஸ்தர் 10 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் தவசிக்குளத்தை சேர்ந்த செல்லத்துரை ஞானச்சந்திரன் (வயது 55) என்ற குடும்பஸ்தரே 23☛

யாழ். குடாநாட்டில் இடம்பெறும்

## வன்முறையை கட்டுப்படுத்தும் வரை பொலிஸாரின் விடுமுறை இரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்தும் வரை பொலிஸாருக்கான விடுமுறை காலவரையறையின்றி இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், வடக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களில் இருந்து பொலிஸார் மேலதிகமாக வரவழைக்கப்பட்டுள்ளதுடன், குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்களை உடனடியாக கைதுசெய்யுமாறு வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோவால் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ் குடாநாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. இதனால் பொதுமக்கள் சுதந்திரமாக நடமாட 24☛

## கொமன்வெல்த் பொதுச் செயலாளர் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு



(கொழும்பு)

கொமன்வெல்த் அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லன்ட் நான்கு நாட்கள் அதிகாரபூர்வ பயணமாக நேற்று பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்தார்.

இதையடுத்து அவர், நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரம 23☛

## வாகன இறக்குமதி வரிகள் அதிகரிப்பு

(கொழும்பு)


வாகனங்களுக்கான வரி திருத்தங்களை நிதிய மைச்சு அறிவித்துள்ளது.

ஆயிரம் இயந்திர வலுவிற்கு குறைவான வாகனங்களுக்கான சுங்க 'வரிகளில் நேற்று புதன்கிழமை முதல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆயிரம் இயந்திர வலுவிற்கு 23☛

## எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பொது எதிரணி கோர முடியாது

கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன்



(கொழும்பு)

அரசாங்கத்திலும் அங்கம் வகித்துக்கொண்டு, உத்தியோகபூர்வமாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோரும் உரித்து பொது எதிரணிக்கு இல்லை.

அரசாங்கத்தில் அமைச்சர்களாக அங்கம் வகிக்கும் கட்சியொன்றின் உறுப்பினர்கள் 23☛

புகையிரதத்துடன் மோதி

## விபத்துக்குள்ளான இளைஞன் மரணம்


(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை நெடுங்குளம் சந்தி புகையிரத கடவையில் சென்றுகொண்டிருந்த கடுகதி புகையிரதத்துடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் மோதுண்டு விபத்துக்குள்ளான சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

நாவற்குழி குடியேற்றத் 23☛

மருத்துவத்துறை சார்ந்த

## சிறந்த ஊடகவியலாளருக்கான விருது வைத்திய நிபுணர் சிவன்சுதனுக்கு



(கொழும்பு)

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் வழங்கப்படும் 2017-ம் ஆண்டுக்கான மருத்துவத்துறை சார்ந்த சிறந்த ஊடகவியலாளருக்கான விருது யாழ் போதனா வைத்தியசாலை 23☛

## வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி மன்ற பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு, வடமத்தி, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களுக்கு உட்பட்ட 101 உள்ளூராட்சி மன்றங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக 106 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டின் கீழ் ஆயிரத்து 214 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு வறுமையான நிலையை குறைப்பதற்காகவும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் இந்தப் பிரதேசத்திற்கு பொருளாதார அடிப்படை வசதிகளைக் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென்று அடையாளம் காணப்பட்டு 23☛

## அபிவிருத்தி மக்களின் நலனுக்காகவே தவிர அரசியல்வாதிகளுக்கு அல்ல

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன



(கொழும்பு)

தற்போதைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நாட்டு மக்களின் நலன்களுக்கானதேயன்றி அரசியல்வாதிகளின் சட்டைப் பைகளை நிரப்பிக்கொள்வதற்காக அல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எழுச்சிபெறும் பொலநறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாட்டு மீக்களுக்கு உரித்தாக்கப்படவுள்ள 180 கருத்திட்டங்களில் சுமார் 60 திட்டங்கள் நேற்றை தினம் மக்களிடம் கையளிக் 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA
## FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE
## MASTER OF BUSINESS ADMINISTRATION (MBA)
## INTAKE IV – 2017/2018

### Extension of closing date for Applications

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA) - 2017/2018 and invites applications for the admission from qualified candidates. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: ***http://www.maco.jfn.ac.lk/***

**ELIGIBILITY REQUIREMENTS**

A candidate seeking admission to an MBA should possess any one or more of the following qualifications and should demonstrate a satisfactory level of English language proficiency:

i. A degree from a recognized University / Higher Education Institution

OR

ii. A Postgraduate Diploma from a recognized University or Higher Education Institution/ Professional Institution with a minimum of one year post qualifying managerial/ relevant experience.

OR

iii. At least any one of the following professional qualifications with three years managerial/ relevant experience:

- Chartered institute of marketing (CIM) UK
- Associate member of Chartered Institute of Bankers (ACIB) UK
- Associate member of Chartered Institute of Bankers (AIB) Sri Lanka
- Chartered Institute of Management Accountants (CIMA)
- Chartered Institute of Personnel and Development (CIPD)
- Association of Chartered & Certified Accountants (ACCA)
- Chartered Accountants (CA) Sri Lanka
- Certified Management Accountant (CMA) Sri Lanka
- Institute of Engineers (CIE) UK/Sri Lanka
- Institute of Chartered Secretaries and Administrators
- At least a three year Higher National Diploma in Accountancy/ Management/ Marketing obtained from Ceylon Technical College/ Advanced Technical Institute/ Advanced Technological Institute, Sri Lanka, etc.
- Attorney – at – Law

OR

iv. Any other academic/professional qualification(s) obtained from a recognized University/ Institute with a minimum of three years of post qualifying experience acceptable to the board of study and the senate of the University of Jaffna.

**PROGRAMME STRUCTURE**

| | | |
|---|---|---|
| Structure | - | Semester based Course Unit System |
| Semester duration | - | Each semester extends for 20 weeks |
| Duration | - | Two years |
| Medium of instruction | - | English |

**COURSE FEE**

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 | Year 2 |
|---|---|---|
| Registration / Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

* Application Fees: LKR 2000/=

**The closing date for applications has been extended up to 31.08.2018.**

**APPLICATION PROCEDURE**

Application form and Paying in voucher can be downloaded from the Faculty website at *http://www.maco.jfn.ac.lk/* or it can be obtained from MBA Office, Faculty of Management Studies & Commerce, University of Jaffna. Duly completed applications should be forwarded to "Coordinator, MBA programme, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli" by registered post or submit it in person at the MBA Office, Faculty of Management Studies & Commerce on or before the closing date. Indicate "Application for MBA Programme" in the top left hand corner of the envelope.

More relevant information could be obtained through **021 221 6394 / 021 222 3610**.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka** (C-3405)

# முடிவெட்டுவதில் மாணவர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு
## மாகாண கல்வி அமைச்சு அறிவிப்பு

பாடசாலைகளில் ஒழுங்கு, கட்டுப்பாடுகளை மேற்கொள்வது என்பது மாணவர்கள் அணிகின்ற சீருடைகளின் தன்மை, அவர்களது தலைமுடிவெட்டு என்பவற்றிலேயே தங்கியுள்ளன. அதனால் மாணவர்கள் அநாகரிகமான தோற்றத்தில் பாடசாலைக்குச் சமுகம் அளிப்பது தடுக்கப்பட வேண்டும். இவ்வாறான பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தக்கூடிய தோற்றத்தில் மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருவதில் பெற்றோர்கள் அக்கறை காட்டுவதுடன் அழகக அலங்கரிப்பாளர்களும் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு வடமாகாண அழகக அலங்கரிப்பாளர் சம்மேளனத்திடம் மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாண கல்வி அமைச்சருடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பில் வடக்கு அழகக சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் கதிரமலை நாகராசா, மாவட்ட தலைவர் ஆனந்தராசா உதயசங்கர் மற்றும் சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர். வடக்கு மாகாண கல்வி அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களின் தலைமுடி அலங்காரம் விரும்பத்தகாத முறைகளில் வெட்டப்படுவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. சந்திப்பின் பொழுது பின்வரும் வகையில் செயற்படுவதாக சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களின் தலைமுடி கட்டையாக வெட்டப்பட்டும் பின்புறம் "ப" வடிவத்தில் முறையாக வெட்டப்பட்டும் இருத்தல் வேண்டும்.

சேட் கொலரிலிருந்து தலைமுடி 1 அங்குலத்திலும் (2.5சென்ரிமீற்றர்) கூடிய இடைவெளியில் இருத்தல் வேண்டும்.

பக்கத் தோற்றம் "ப" வடிவத்தில் சீராக்கப்பட்டு காதுக்குமேல் இருக்கவேண்டும். அதன் கீழ் நீண்டிருக்க கூடாது.

தலைமுடியின் நீளம் அரை அங்குலத்திற்கு மேல் இருக்கக்கூடாது. தலையில் வரிகள், வடிவங்கள் ஏற்படுத்துதல் முற்றாக தடை செய்யப்படுகின்றது. பூசகர்கள் மற்றும் மத அனுஷ்டானங்களை நடத்துபவர்கள், அவர்களுக்குரிய சம் பிரதாய சிகை அலங்காரம் மேற்கொள்ள முடியும் என்ற கட்டுப்பாடுகளுக்கு இணக்கம் காணப்பட்டது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் தலைமுடியை இடதுபக்கம் உச்சிபிரித்து ஒழுங்காக அழகாக சீவப்பட்டிருப்பதுடன், எண்ணெய் தவிர்ந்த ஏனைய திரவங்கள் (ஜெல்,சாயம்) பூசுவதும், சென்ற் போன்ற செயற்கை வாசனைத் திரவியங்கள் பூசுவதையும் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும்.

பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரும் இவற்றைத் தவிர்த்து, முன்மாதிரியாக இருந்து, மாணவர்களின் தலைமுடி வெட்டு மற்றும் சீருடைகளில் கூட்டுப் பொறுப்புடன் கவனம் செலுத்தவேண்டும் என்று மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் கேட்டுக் கொண்டார் என்றுள்ளது. (ம-9)

**விற்பனைக்கு**

3 கதவு அலுமாரி, றெசின் ரேபில், கண்ணாடி மேசை, சாப்பாட்டு மேசை.

T.P:-0762160099 (S234)

# கண்ணீர் அஞ்சலி

**திருமதி செல்லத்துரை சிதம்பரம்**



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.பா.சிவகுமார் அவர்களின் அன்பு மாமியார் திருமதி செல்லத்துரை சிதம்பரம் அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 01.06.1946 மறைவு 31.07.2018

(C-3406)

**ஆசிரிய சகோதரத்துவம்**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

# கண்ணீர் அஞ்சலி

**திருமதி சரஸ்வதி அருளம்பலம்**



யாழ்ப்பாண கல்வி வலய பொது நிர்வாகப் பிரிவில் கடமையாற்றும் திருமதி கு.பாலாம்பிகை அவர்களின் அன்புத் தாயார் திருமதி சரஸ்வதி அருளம்பலம் அவர்கள் 29.07.2018 அன்று காலமானார்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்** (F-3404)

# யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இராணுவம்

## "கையகப்படுத்தும் நோக்கம் இல்லை-தளபதி மகேஷ் விளக்கம்"

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டையை இராணுவம் கையகப்படுத்துவதாக தெரிவிப்பதில் எவ்வித உண்மையும் இல்லை என இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார். யாழ்.மாவட்டத்திற்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்த இராணுவத்தளபதி மகேஷ் சேனநாயக்க யாழ்.ஒல்லாந்தர் கோட்டையினை நேற்று நேரில் சென்று பார்வையிட்டதுடன், அங்குள்ள நிலவரங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.







இந்தக் கோட்டையினை இராணுவம் கையகப்படுத்துவதாக தெரிவிக்கப்படடு வருவதுடன் இராணுவத்திற்கு எதிராக அண்மைக் காலமாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவரும்நிலையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இராணுவத்தளபதி கோட்டையினை நேரில் சென்று பார்வையிட்டதுடன், கோட்டைப் பகுதியில் பாதுகாப்பின் நிமித்தம் நீண்டகாலமாக தங்கியுள்ள இராணுவத்தினரை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் கோட்டையை இராணுவம் கையகப்படுத்துவதாக தெரிவிப்பதில் எவ்வித உண்மையும் இல்லை.

யாழ். நகர மக்களின் பாதுகாப்பின் நிமித்தம் பல வருடங்களாக சிறு அளவிலான இராணுவத்தினர் கோட்டையில் இருந்துவருவதாக அவர் குறிப்பிட்டதுடன் இது நாட்டின் எல்லா பகுதிகளிலுமுள்ளதொரு சாதாரண நடவடிக்கை என்றும் தெரிவித்தார்

அதேவேளை, எந்நேரத்திலும் கோட்டைக்குள் பொது மக்கள் வந்து செல்ல முழு சுதந்திரம் உண்டு எனவும், பொது மக்கள் கோட்டையை பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் எந்த விதத்திலும் தடையாக இருக்கமாட்டார்கள் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்-அத்துடன் இராணுவத்தினரிடமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்கும் செயற்பாடு குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த இராணுவத்தளபதி விரைவில் மேலும் சொற்ப நிலங்களை விடுவிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியும் கலந்து கொண்டிருந்தார். (இ-9-101)

**30 மில்லியன் ரூபா விவகாரம்**

## நாமலுக்கு எதிரான வழக்கு 11 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினருக்கு வழங்கிய வாக்கு மூலங்களில் இரண்டு பொய்யானது என்று வழக்கின் பிரதான சாட்சியாளரா்ன றொஹான் அபய ஈரிய கொல்ல நீதிமன்றில் தெரிவித்துள்ளார். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைக்கப் பட்டது.

நாமல் ராஜபக்ஷ தரப்பு சட்டத்தரணியின் குறுக்கு விசாரணையின் போது, முன்னதாக இரகசியப் பொலிஸாருக்கு வழங்கிய 5 வாக்கு மூலங்களில் இரண்டு பொய்யானது என்று சாட்சியாளர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

முன்னதாக வழக்கின் பிரதிவாதியால் 36 மில்லியன் ரூபாவுக்கான காசோலை தனக்கு வழங்கப்பட்டதாக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் வாக்கு மூலம் வழங்கியுள்ள சாட்சியாளர், நீதிமன்றில் சாட்சியமளிக்கும் பேழதே 30 மில்லியன் ரூபாவுக்கான காசோலையே வழங்கப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

இவை ஒன்றுக்கொன்று முரணானதில்லையா என்ற நாமல் ராஜபக்ஷ தரப்பு சட்டத்தரணியின் விசாரணைக்கு பதிலளிக்கும் போதே சாட்சியாளர் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதன்படி வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகள் எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக உழைக்கப்பட்ட 30 மில்லியன் ரூபா நிதியை பயன்படுத்தி கவர்ஸ் கோப்பரேட் எனும் நிறுவனத்தில் முதலீடு செய்தமை ஊடாக நிதி மோசடி சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## இலங்கைக்கு பதிலாக தமிழ்நாடு! இந்திய நாடாளுமன்றத்தில் அமளியை ஏற்படுத்திய பேச்சு

(டில்லி)

இந்தியாவுக்கு வரும் அகதிகள் விடயத்தில் இந்திய மத்திய உள்துறை இணைய மைச்சர் கிரண் ரிஜ்ஜூ தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

"இந்தியாவுக்கு தமிழகத்தில் இருந்தும் அகதிகள் வருவதாக" அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

பங்களாதேஷ், தமிழகம், மியன்மார் போன்ற இடங்களில் இருந்து இந்தியாவுக்கு அகதிகள் வருகின்றனர்" என இந்திய மத்திய உள்துறை இணையமைச்சர் கிரண் ரிஜ்ஜூ தெரிவித்தார்.

உடனே அவரை இடைமறித்த சபாநாயகர் சுமித்ரா மகாராஜன், "தமிழ்நாடு அல்ல. இலங்கையிலிருந்து தான் தமிழ் அகதிகள் வருகின்றனர்" எனத் திருத்திக் கூறினார்.

அப்போது, தமிழகமும் இந்தியாவில் தான் இருக்கிறது. தமிழகத்தில் இருந்து அகதிகள் இந்தியாவுக்குள் வரமுடியுமா? எனக் கூறி அ.தி.மு.க, காங்கிரஸ், உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் கூச்சல் எழுப்பினர்.

உடனே சுதாரித்து கொண்ட கிரண் ரிஜ்ஜூ, "இலங்கையில் இருந்து அகதிகள் வருகிறார் என்று கூறுவதற்கு பதிலாக வாய் தவறி கூறிவிட்டேன்" எனத் தெரிவித்தார்.

இதனால் அவையில் சிறிது நேரம் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. பின்னர் சபாநாயகர் சுமித்ரா மகாஜன் எம்.பிக்களை சமாதானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜாலிய விக்கிரமசூரியவை கைது செய்ய மீண்டும் திறந்த பிடியாணை உத்தரவு

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மீண்டும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம்கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜெயரட்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவருடைய பிணைக்காக முன்னின்ற அவரின் மனைவி மற்றும் அவரின் உறவுக்கார சகோதரியையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜெயரட்ன உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் அவருடைய பிணைக்காக முன் வைக்கப் பட்ட அவருடைய இடத்தையும் அரசுடைமையாக்க இதன் போது வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, குறித்த வழக்கு மீதான விசாரணை கள் ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் லங்கா ஜெயரட்ன உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## இலங்கையில் முட்டை இறக்குமதிக்குத் தடை

(கொழும்பு)

இலங்கையில் முட்டை இறக்குமதி இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

உள்ளூர் முட்டை விநியோகத்தர்களை ஊக்குவிக்கும வகையிலேயே முட்டை இறக்குமதி இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முட்டைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதால் உள்ளூர் முட்டை உற்பத்தியாளர்கள் பாரியளவிலான நெருக்கடிகளையும் இழப்புக்களையும் சந்தித்துள்ளதாக்வும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சிறைச்சாலை உயர் அதிகாரிக்கு பாதாள உலகக் குழுவுடன் தொடர்பு

(கொழும்பு)

சிறைச்சாலை உயர் அதிகாரி ஒருவருக்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு இருப்பதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், சிறைச்சாலை அதிகாரிகள் இருவருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன.


அண்மையில் கொஹூவல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டிருந்த மொஹமட் சுவஹீர் என்னும் போதைப் பொருள் வர்த்தகருக்கு, சிறைச்சாலை விடுமுறை இல்லமொன்றில் தங்குமிட வசதிகளை செய்து கொடுத்ததாக இந்த இரண்டு அதிகாரிகள் மீதும்குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

பல்லேகலே சிறைச்சாலையின் பிரதம சிறைச்சாலை அதிகாரி மற்றும் உதவியாளர் ஒருவருக்கு எதிராகவே இவ்வாறு குற்றம் சுமத்தி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்த இரண்டு அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக நீதிமன்றம் சிறைச்சாலைகள் அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## சபாஷ் அஷ்வின், சமி

# ஜோ ரூட்டின் ஆட்டமிழப்பின் பின் மீண்டெழுந்தது இந்தியா





பேர்மிங்காம் டெஸ்டில் இந்திய வீரர்கள் அபாரமாக பந்து வீச, இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 9 விக்கெட்டுக்கு 285 ஓட்டங்கள் எடுத்திருந்தது அஷ்வின் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் பேர்மிங்காமில் நடக்கிறது.

வரலாற்று சிறப்புமிக்க இங்கிலாந்தின் ஆயிரமாவது டெஸ்டில் அணித் தலைவராக களமிறங்கிய ஜோ ரூட், நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

### புஜாரா இல்லை

இந்திய அணியில் சற்றும் எதிர்பார்க்காத வகையில் புஜாராவுக்குப் பதில் 'நடுத்தர வரிசையில்' லோகேஷ் ராகுல் சேர்க்கப்பட்டார். மூன்று 'வேகம்', ஒரு 'சகலதுறை வீரா', ஒரு 'சுழல்' வீரர் என்ற வகையில் இந்திய அணி அறிவிக்கப்பட்டது.

### அஷ்வின் நம்பிக்கை

இங்கிலாந்து அணிக்கு முதல் இன்னிங்சில் 'சீனியர்' அலெஸ்டர் குக், ஜென்னிங்ஸ் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. இஷாந்த் ஓவரில் ஜென்னிங்ஸ் 9 ஓட்டங்களுடன் இருந்தபோது ரகானே தயவில் தப்பிப் பிழைத்தார். வழக்கமாக அஷ்வினுக்கு எதிராக குக் தடுமாறுவார் என்பதால், 7ஆவது ஓவரிலேயே அஷ்வினை அழைத்தார்.

இதற்கு கைமேல் பலன் கிடைத்தது. 13 ஓட்டங்கள் எடுத்த குக், அஷ்வின் 'சுழலில்' போல்டாகினார். பின் ஜோ ரூட், ஜென்னிங்ஸ் இணைந்தனர்.

### ஷமி 'இரண்டு'

இந்த ஜோடி ஒன்றிரண்டு ஓட்டங்களாக சேர்த்தது. அவ்வப்போது பவுண்ட ரிகள் அடிக்க ஓட்டஎண்ணிக்கை சீராக உயர்ந்தது. இஷாந்த் வீசிய போட்டியின் 10ஆவது ஓவரில் ஜென்னிங்ஸ், ஜோ ரூட் பவுண்டரிகள் அடித்தனர். தொடர்ந்து ஷமி, உமேஷ் பந்துகளிலும் ஜோ ரூட் பவுண்டரிகள் விளாசினார்.

இரண்டாவது விக்கெட்டுக்கு 72 ஓட்டங்கள் சேர்த்த போது, மொஹமட் ஷமி வேகத்தில் ஜென்னிங்ஸ் (42) போல்டாகினார். அடுத்து வந்த மலானை, 8 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் ஷமி.

### ஹோலி திருப்பம்

மறுபுறம் ஜோ ரூட், டெஸ்ட் அரங்கில் 41 ஆவது அரைச்சதம் எட்டினார். இவருடன் இணை ந்த பேர்ஸ்டோவும் அரைச்சதம் அடித்தார். 4வது விக்கெட்டுக்கு 104 ஓட்டங்கள் சேர்த்த போது, ஹோலி திருப்பம் ஏற்படுத்தினார். இவரது சுப்பர் 'த்ரோ' காரணமாக ஜோ ரூட் (80) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின் எழுச்சி கண்ட இந்திய பந்துவீச்சாளர்கள் அசத்த, பேர்ஸ்டோவ் (70), பட்லர் (0), ஸ்ரோக்ஸ் (21), ரஷித் (13), பிரோட் (1) விரைவில் ஆட்ட மிழந்தனர்.

முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 9 விக்கெட்டுக்கு 285 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சுழலில் அசத்திய அஷ்வின் 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். குர்ரான் (24), அண்டர்சன் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி




அன்ரோ ரசலின் விளாசல் கைகொடுக்க பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது 'ரி20' போட்டியில் 'டக்வொர்த் லீவிஸ்' விதிமுறைப்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் போட்டி நேற்று செயின்ட் கிட்ஸில் நடந்தது. நாணயச்சழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி களத் தடுப்பை தேர்வு செய்தது.

### வில்லியம்ஸ் அசத்தல்

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

ஆஷ்லே நர்ஸ் வீசிய முதல் ஓவரில் தமிம் இக்பால், சௌமியா சர்கார் டக் அவுட்டாகினர். லிட்டன் தாஸ் (24), அணித் தலைவர் சகிப் அல் ஹசன் (19) நிலைக்கவில்லை. கெஸ்ரிக் வில்லியம்ஸ் 'வேகத்தில்' முஷ்பிகுர் (15), மெகடி (11) சிக்கினர். அதிகபட்சமாக மகமுதுல்லா 35 ஓட்டங்கள் எடுத்தார்.

20 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களை எடுத்தது.

ரூபெல் (2), முஸ்டபிசுர் (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### ரசல் விளாசல்

எளிய இலக்கை விரட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு மழை தொல்லை கொடுத்தது. 90 நிமிட இடைவெளிக்குப் பின் 11 ஓவர்களில் 91 ஓட்டங்கள் என வெற்றியிலக்கு மாற்றி அமைக்கப்பட்டது.

முஸ்டபிசுர் 'வேகத்தில்' பிளட்சர் (7), லீவிஸ் (2) திரும்பினர். ரசல் 3 சிக்சர் அடித்து வெற்றியை எளிதாக்கினார். சாமுவேல்ஸ் 26 ஓட்டங்கள் எடுத்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 9.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்கள் எடுத்து 'டக்வொர்த் லீவிஸ்' விதிப்படி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ரசல் (35), பவெல் (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இவ்வெற்றி மூலம் 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

# தென்னாபிரிக்கா வெற்றி

குயின்ரன் டி காக் அரைசதம் கடந்து கைகொடுக்க இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களால் மீண்டும் வெற்றி பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள்கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றிருந்த நிலையில்,

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்று தம்புள்ளயில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு உபுல் தரங்க (9), குசல் மெண்டிஸ் (0) ஏமாற்றினர். குசால் பெரேரா (12) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய டிக்வெல (69), அணித் தலைவர் மத்யூஸ் (79*) அரைசதம் கடந்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 2 4 4 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் லுங்கிடி, பெலுக்வாயோ தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

### குயின்ரன் அரைச்சதம்

சுலப இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா (43) நல்ல ஆரம்பம் கொடுத்தார். மார்க்ரம் (3) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய குயின்ரன் டி கொக் (87) அரைச்சதம் கடந்தார். அணித் தலைவர் டுபிளசி (49) ஓரளவு கைகொடுத்தார். மில்லர் (3) நிலைக்கவில்லை. டுமினி (32) ஆறுதல் அளித்தார்.

42.5 ஓவரில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்டுக்களால் 2ஆவது வெற்றியை பதிவு செய்தது.

பெலுக்வாயோ (7), முல்டர் (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் தனஞ்செய 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இவ்வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்க அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இத்தொடரின் மூன்றாவது போட்டி கண்டி பல்லேகலேயில் எதிர்வரும் 5ஆம் திகதி நடக்கிறது.

# 60ஆவது பிறந்தநாளும் 8ஆம் மாத நினைவு நாளும்



திருமதி.

## மகேஸ்வரி சர்வேஸ்வரசெவ்வேள்

(ஆசிரியை-மானிப்பாய் மகளிர் கல்லூரி, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,
சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை,
முன்னாள் ஆசிரியை - மயிலணி சைவ மகா வித்தியாலயம், சுன்னாகம்)

**பாசத்தூண்டுதல் : 1958.08.02**

**பாரினைத்தாண்டுதல்: 2017.12.22**







எளிமையான நடைமுறையுடனும் வலிமையான கொள்கையுடனும் வாழ்ந்து கொள்கையில் வெற்றி கொண்டு இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வமே எட்டுத்திங்கள் ஆனாலும் எமைப் பிரிந்து எத்தனை ஆயிரம் திங்கள் ஆனாலும் நீங்குமோ உம் நினைவு மறையுமோ உம் சிரித்த முகம். தேவைக்கு ஏற்ப நீர் இறைத்தும் பராமரித்தும் எம் வீட்டு பூஞ்செடிகள் மரங்கள் கூட வாடுதம்மா உம் நிழல் தேடி பாடசாலை நேரம் முடிந்து நீங்கள் வீடு வரும் வேளையில் வாசலில் காத்திருக்கும் செல்லப் பிராணிகள் இன்றும் அதே நிலையில் தான் வாழுதம்மா... எம்மால் மட்டும் எப்படியம்மா மறக்கமுடியும். உங்களுடன் வாழ்ந்த பாச நினைவுகளை மணிவிழா கொண்டாட்டத்தை விரும்பாத தாங்கள் மணிவிழாவை எப்படி கைவிடுவது என்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வீட்டில் விருந்துபசாரம் செய்ய வேண்டும் என்ற விருப்பத்துடன் மணிவிழா கொண்டாட்டத்தை மட்டும் கைவிட நினைத்திருந்தீர்கள்.
உங்கள் கொள்கைப்படியோ என்னவோ? மணிவிழாவுக்கு முன்பே இறைவனடி சேர்ந்து விட்டீர்கள்.
உங்கள் விருந்துபசார விருப்பம் உங்கள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அன்றே நிறைவேறியது.
மண்ணில் மணிவிழா கொண்டாட விருப்பமில்லாமலா தாங்கள் விண்ணில் கொண்டாடுவதற்கு விரைந்து சென்றீர்கள் மஞ்சள் குங்குமத்துடன்...

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
-குடும்பத்தினர்-

நீங்கள் நோயுற்றிருந்த போது உங்களை சுகம் விசாரிக்க வந்த உங்கள் மாணவச் செல்வங்களை கண்டு பரீட்சைக்கு தோற்றும் நேரத்தில் கற்பிக்க முடியவில்லை என்று கண்ணீர் விட்டீர்கள். அப்போது மாணவச் செல்வங்கள் அழுதுகொண்டே ஆறுதல் சொன்னார்கள். பரீட்சையில் நாங்கள் எப்படியும் சித்தியடைவோம் நீங்கள் குணமடைந்து வந்து எமை வாழ்த்துவீர்கள் என்று அதே போல பரீட்சையில் வழமையினை விட கூடிய விகிதாசாரத்தில் சித்தி அடைந்தார்கள். அவர்களுக்கும் உங்களால் தொடர முடியாத கற்பித்தலை தன் வேலைப் பளுவுக்கு மத்தியிலும் உங்களுக்காகவும் மாணவச் செல்வங்களுக்காகவும் தானே முன்வந்து கற்பித்த உங்கள் பாடமான மனைப்பொருளியல் ஆசிரிய ஆலோசகரான அன்புச் சகோதரிக்கும் அதிபர், ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றி செலுத்துவதை தவிர வேறு என்னம்மா செய்ய முடியும்.
நேரில் சென்று வாழ்த்துவதற்கு தபுதாரனுக்கு தகுதி உண்டோ என தெரியவில்லையம்மா. எனவே அங்கிருந்து இறைவனை வேண்டி வாழ்த்துங்களம்மா.அவர்கள் எதிர்காலம் மென்மேலும் பிரகாசமடையட்டும். இது ஒன்றே தங்களை பிரிந்து வாழும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் சற்று ஆறுதலை தரும் என்று நினைக்கின்றேன்.

-கணவர்-

மாவடி வீதி, சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(5230)

# யாழில் வாள்வெட்டுக் குழுக்களைக் கட்டுப்படுத்த விசேட மோட்டார் சைக்கிள் படையணி களமிறக்கம்

## பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் வாள்வெட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த விசேட மோட்டார் சைக்கிள் படையணி களமிறக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் வாள்வெட்டு மற்றும் கொள்ளைச்சம்பவங்கள் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் விசேட ரோந்து நடவடிக்கைகளுக்காக, சுமார் 10 மோட்டார் சைக்கிள்கள் அடங்கிய விசேட பொலிஸ் அணியொன்று யாழில் களமிறக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 100 இற்கும் அதிகமான சிவில் பொலிஸ் அதிகாரிகள் களமிறக்கப்பட்டுள்ளதாகவும் ஓரிரு வாரங்களுக்குள் குறித்த குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் பொலிஸாரின் செயற்பாட்டுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் வாள்வெட்டுக் கும்பல்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தவர்கள் பொலிஸாருக்குத் தகவல்களை வழங்குவதன் மூலம் விரைவில் அவர்களை கைதுசெய்து சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த முடியும்.

குறிப்பாக யாழில் கிராம உத்தியோகத்தர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடந்ததாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் எனினும் குறித்த கிராம உத்தியோகத்தர் அலுவலகம் இயங்கும் வாடகை வீட்டில் முன்னர் வாள்வெட்டுக்குழுக்களுடன் தொடர்புடைய ஒருவர் வசித்து வந்ததாகவும் அவர் மீது தாக்குதல் நடத்தவே வந்த குழுவினர் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தை சேதப்படுத்தியதுடன் அவரையும் அச்சுறுத்தியுள்ளதாக அத்தியட்சகர் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர் பில் உரிய தடயங்கள் கிடை க்கப்பெற்றுள்ளமையால், விரைவில் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-101)




2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் 1, 2, 3 ஆம் இடங்களைப் பெற்ற கொமர்ஷல் வங்கியின் சுன்னாகக் கிளையில் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கை பேணி வந்த மாணவர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வு அண்மையில் சுன்னாகம் வங்கிக் கிளையில் வங்கி முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நடைபெற்றது.

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி ஆதனவரி நிலுவை அறவீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை வட்டாரம் 6 இற்கான நடமாடும் சேவை ஈச் சமோட்டை சனசமூக நிலையத்தில் இடம்பெறும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ

## அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிவலயத்தில்வெற்றிடமாகவுள்ள யா/நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் (வகை- II.) அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.இலங்கை அதிபர் சேவையில் தரம் 2,3 தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2.இலங்கை அதிபர்சேவையில் அதிபராக கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது)

3. வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

5.விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

6.இலங்கை அதிபர்சேவை தரம் 2 ஐச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப் பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம் தரம் 3 ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

7.விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 13.08.2018 ஆகும்.

8. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

9. விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார். (இ

## 'எம்மால் முடியும்' கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஆய்வு நிறுவனம் வழங்கும் 'எம்மால் முடியும்' தொடர் கருத்தரங்கின் முதலாவது கருத்தரங்கு இன்றைய அரசியல் சமூக பொருளாதார நிலை என்ன? மாற்றம் வேண்டுமா யின் போக்கென்ன வீச்சென்ன? என்ற தலைப்பில் எழுத்தாளர் சாந்தன் தலைமையில் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதில்அறிமுகஉரையினை பேராசிரியர் ஆர்.சிவச்சந்திரனும் 'இன்றைய அரசியல் யதார்த்தம்- மாற்றம் வேண்டுமா? மாற்றத்தின் உந்து சக்திகள் யார்?' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசியல் விஞ் ஞானபீட பீடாதிபதி கலாநிதிகே.ரி.கணேசலிங்கம் உரையாற்றுவார்.

வடபகுதி கடற்றொழிலின் சமகால நிலவரங்கள் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் ஏ.எஸ். சூசை உரையாற்றுவார். சமூகநிலை மாற்றத்தில்சமூகப்பிரச்சினைபிறழ்வுகளும் வலுவூட்டப்பட வேண்டிய பொறிமுறைகள் என்ன? என்ற தலைப்பில் யாழ். பல்கலை சமூகவியல்துறையைச் சேர்ந்த இ.இராஜேஸ்கண்ணன் உரையாற்றுவார். (இ

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் குறுங்கால கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில்வீட்டுமின்பாவனை உபகரணங்கள் திருத்துதல் (House Hold Electrical Appliances Repairing) என்னும் குறுங்கால கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி கற்கை நெறி க்கு 10 ஆம் தரத்தை பூர்த்தி செய்த 17 வயது தொடக்கம் 29 வயது வரையானவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இக் கற்கை நெறி முற்றிலும் இலவசமான 6 மாத கற்கை நெறி ஔடதுடன் மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவு தொகை மற்றும் போக்குவரத்து பருவகால சீட்டு என்பன வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்க முடியும் என்பதனால் பயில விரும்புவோர் உடனடியாக தொழில் நுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக விபரங்களுக்கு 021 221 2403 எனும் இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இராசி பலன்

**மீனம்:** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மேடம்:** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியத் தகவல்கள் வந்த சேரலாம், பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நிகழ்வதற்கான வழி பிறக்கும், நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும்.

**கடகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், தொழிலில் பணியாளர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும்.

**மகரம்:** சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.

**சிம்மம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | இராசி பலன் கிரகநிலை | | சூரி, புத, ராகு |
| கேது, செவ். | சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம் | | சுக் |
| சனி | | குரு | |

02.08.2018

ஆடி 17, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

பஞ்சமி முற்பகல் 8.40 மணிவரை

உத்திரட்டாதி முற்பகல் 11.10 மணிவரை

சுபநேரம் 07.33-09.03 மணிவரை

இராகுகாலம் 01.33-03.33 மணிவரை

வளவன்

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர்களால் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**விருச்சிகம்:** இல்லத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்:** பொதுவாழ்வில் புகழ்கூடும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


**கன்னி:** பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், பெண்களின் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

# வாள்கள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்த குழு சரசாலையில் நள்ளிரவு வேளை அட்டகாசம்

## அச்சத்தில் உறைந்த வீட்டார்; பல பொருட்கள் அடித்து உடைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி சரசாலை -கனகம்புளிச்சந்தியை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (31.07.2018) இரவு 11மணியளவில் வாள்கள், கத்திகள் மற்றும் கொட்டனுடன் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் அடங்கிய குழு அங்குள்ள வீடொன்றினுள் புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது. இதன் போது வீட்டு உரிமையாளரால் வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்றினையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.







இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

குறித்த வீட்டில் வெளிநாட்டிலிருந்து வந்து தங்கியிருந்தவர்களின் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. அந்த நிகழ்வு நிறைவடைந்த பின்னர் வீட்டார், உறவினர்கள் என சுமார் 20 பேர் வீட்டின் வெளியே இருந்து கதைத்துக் கொண்டிருந்த போதே இரண்டு மோட்டார் சைக்கிளில் ஆயுதங்களுடன் வந்த குழு அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

இதன் போது வெளி மதிலில் பொருத்தப்பட்டிருந்த பெறுமதியான 7 மின்குமிழ்கள், வீட்டு யன்னல் கண்ணாடிகள், வீட்டினுள் இருந்த குளிர்சாதனப்பெட்டி மற்றும் வீட்டிற்கு வெளியே காணப்பட்ட கதிரை, மேசைகளையும் அடித்து நொருக்கி சேதப்படுத்தியுள்ளனர். பின்னர் வீட்டினுள் காணப்பட்ட பெறுமதியான வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட கையடக்கத் தொலைபேசி ஒன்றினையும் எடுத்துக் கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர். இதன் போது வீட்டில் இருந்த சிறுவர்கள் உட்பட அனைவரும் ஆயுததாரிகளிடமிருந்து தப்பிப்பதற்காக வீட்டிற்கு பின்னே சென்று ஒளிந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக வீட்டு உரிமையாளர் தெரிவிக்கையில்,

இது களவு எடுக்கும் நோக்கில் வந்ததாகத் தெரியவில்லை. ஒரு குழப்பத்தை உண்டு பண்ணும் நோக்கில் வந்ததாகவே தெரிகிறது எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உடனடியாக 119 அவசரபொலிஸ் இலக்கத்திற்கு அழைப்பு விடுத்து விடயத்தினை கூறிய போதிலும் தமக்கு உடனடியாக எந்தவொரு ஆறுதலோ அல்லது உதவியோ கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் சரசாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் திருட முற்பட்ட கும்பல் வீட்டிலிருந்த நாய் ஆவேசமாக குரைத்த போது நாயினை வாளால் வெட்டி விட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-29-30)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் குருநகர் கலையரங்கு முன்றலில் திருமதி அன்ரன் மேரி அல்போன்சா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் தம்பிராசா சிவகுமார், சிறப்பு விருந்தினர்களாக புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை அருள் திரு சாள்ஸ் யஸ்ரின், ஜே/ 69 கிராம உத்தியோகத்தர் சி.குருதர்சன், திருமதி பிறின்ரன் டயானி, கௌரவ விருந்தினர்களாக யாழ். கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் சத்தியசீலன் ஜெகதாயினி நிலையச் செயலாளர் ஞா. லூயிஸ் அன்ரனி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-106)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தான தேவி திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 4 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 46 செவ் 7 இல்
உயரம்: 182cm
தகைமை/தொழில்:BSc/முகாமையாளர்
தொ.இ: B/8756

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்
தொ.இ: B/8765

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 7
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/8766

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்:நோர்வே
தொ.இ: B/8767

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 157cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8792

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:PHD/அமெரிக்கா
தொ.இ: G/8794

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: சூரிசெவ் 1 இல்
உயரம்: 163cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/8796

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:HNDA/தனியார் வங்கியாளர்
தொ.இ: G/8799

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலாரும்)
- பத்திரிகை மடிப்பவர் (ஆண்கள்)
- பத்திரிகை விநியோகஸ்தர்கள் (ஆண்கள்)

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை

பொதுமுகாமையாளர்
வலம்புரி, இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு எதிர்வரும் 07.08.2018 ஆம் திகதிக்கு முன்னர் சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிடுவது அவசியம்.

வலம்புரி- பொது முகாமையாளர்

# சுருக்கு வலையினை தடைசெய்யாவிடின் பாரிய போராட்டம் வெடிக்கும்

## மீனவ அமைப்பு எச்சரிக்கை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலையினை பயன்படுத்துபவர்களது அனுமதியை இரத்து செய்வது தொடர்பில் கடந்த 24 ஆம் திகதி மீனவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி உறுதி அளித்திருந்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்தளன் கடற்பகுதியில் இருந்து நான்கு படகுகள் மூலம் சுருக்கு வலையைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கைக்கு புறப்பட்டுள்ளார்கள். இவ்வாறான சுருக்கு வலை பயன்பாட்டால் பேப்பார்பிட்டி தொடக்கம் கொக்குத்தொடுவாய் வரையான கடலை நம்பி வாழும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதனால் உடனடியாக குறித்த சுருக்கு வலை பயன்பாட்டை தடை செய்யக் கோரிய கடற்றொழில் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்குச் சென்றுள்ளார்கள். இதன்போது அங்கு குறித்த அதிகாரி இல்லாத காரணத்தால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பொலிஸ் அதிகாரியுடன் தங்கள் பிரச்சினைகளை முறையிட்டுள்ளார்கள்.

இதற்கு பொலிஸார் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில் செய்யும் நடவடிக்கையினை கடற்படையினருடன் இணைந்து கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ந்து மீனவர்கள் வெட்டுவாகல் பகுதியில் உள்ள கோத்தபாய கடற்படை முகாம் அதிகாரியைச் சந்திக்கச் சென்றுள்ளார்கள்.

அங்கு அதிகாரி இல்லாத காரணத்தால் மீண்டும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பாணிப்பாளரை சந்தித்து தங்கள் கோரிக்கையினை முன் வைத்துள்ளார்கள்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்பின் தலைவர் ஜெயா கருத்துத் தெரிவிக்கும் போது, கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீண்டும் சுருக்கு வலை பயன்பாட்டிற்கு தொடங்கியுள்ளார்கள்.

இது தொடர்பில் கதைப் பதற்காக சென்றோம். அங்கு அவர் நான் முடிவெடுக்க முடியாது என்றும் கடற்றொழில் அமைச்சின் மூன்றாவது நிலையில் உள்ள அதிகாரி ஒருவர் தொலைபேசிமூலம் சுருக்கு வலைக்கான அனுமதியை வழங்கச் சொல்லி பணித்துள்ளார். பணிப்பாளர் நாயகம் நாட்டில் இல்லாத காரணத்தால் ஆறு நாட்கள் அவகாசம் கேட்டுள்ளார்கள். வெகுவிரைவில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு எதிராக பாரியளவிலான ஆர்ப்பாட்டம் நடக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (7-8-281)








கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்று (01-08-2018) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று (01-08-2018) 9.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி ஸ்தம்ப பூசை, வசந்தமண்டப பூசை என்பன நடைபெற்று சுவாமி உள்வீதி உலாவும் வெளிவீதி உலாவும் நடைபெற்றது. (படங்கள்:-கண்டாவளை செய்தியாளர்)

# இந்திய இழுவைப்படகுகளை நிபந்தனையுடன் விடுவிக்கக் கோரி மீனவர்கள் போராட்டம்

## அரசாங்க அதிபரிடம் மகஜரும் கையளிப்பு





வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் தொழில் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கக் கோரியும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்று புதன்கிழமை மன்னாரில் பேரணி இடம்பெற்றதோடு, மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் இடம்பெற்றது.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் தலைமையில் இடம்பெற்ற குறித்த பேரணியில் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால்-கலபதி, மாத்தறை மாகாண சபை உறுப்பினர் ரத்தின கமமே உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது குறித்த பேரணியில் கலந்து கொண்டிருந்தவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோசமிட்டனர்.

குறிப்பாக வடபகுதி மீனவர்களாகிய தாங்கள் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக உள்நாட்டு யுத்தம், இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையும் அவர்களின் சட்டவிரோத மீன்பிடி முறைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தென்னிலங்கை மீனவர்களின் மிதமிஞ்சிய வருகை மற்றும் உள்ளூர் மீனவர்களால் மேற்கொள்ளப்படும் தடை செய்யப்பட்ட தொழில் முறைகள் மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விலையேற்றங்கள் காரணமாக சிறு கடலை நம்பி வாழும் பல ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களும் அவர்களை நம்பி வாழும் அவர்களின் குடும்ப உறவுகளும் மிகவும் துன்பத்துடன் வாழ்ந்து வருவதாகவும் கவலை தெரிவித்தனர்.

எனவே மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து குறித்த பேரணியை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் இடம்பெற்ற குறித்த பேரணியைத்தொடர்ந்து மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் மாவட்ட அரசாங்க அதிபர் கே.ஏ.மோகன் ராஸிடம் மகஜர் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# வவுனியா விபத்தில் காயமடைந்த மாணவர்களை பார்வையிட்ட பொலிஸ்மா அதிபர்

## இ.போ.ச.பேருந்தை சேவையில் ஈடுபடுத்தத் திட்டம்

(குருமன்காடு)

வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த சிறுவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் நேற்று முன்தினம் வவுனியா பொது வைத்தியசாலையில் வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

வவுனியா ஏ-9 வீதியில் புதூர் சந்திக்கு அருகாமையில் இ.போ.சபை பேருந்து பாடசாலைச் சிறுவர்கள் சென்ற ஆட்டோவுடன் மோதியதில் 9 பாடசாலை சிறுவர்கள் காயமடைந்ததுடன் எட்டு வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்திருந்த நிலையில் சிறுவர்களின் உறவினர்களை வவுனியா பொது வைத்தியசாலையில் சந்தித்த வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் அவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் நேற்றிலிருந்து சிறுவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு விசேட இ.போ.சபை பேருந்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து சிறுவர்களின் பெற்றோர்களுடன் உரையாடிய அவர், இலங்கை சட்டத்தின் பிரகாரம் ஆட்டோவில் ஆறு சிறுவர்களை மாத்திரமே ஏற்றிச் செல்ல முடியும். அன்றையதினம் 11 சிறுவர்கள் ஆட்டோவில் பயணித்துள்ளனர். இருந்த போதும் பரிசங்குளம் மக்கள் குடியிருப்பிலிருந்து புளியங்குளம் பாடசாலை வரை இ.போ.சபை பேருந்து இயக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் விபத்தில் பிள்ளையை பறிகொடுத்த பெற்றோருடன் உரையாடிய பிரதி பொலிஸ்மா அதிபர் அவர்களுக்கு ஆறுதல் கூறியிருந்தார். விபத்தில் உயிரிழந்த சிறுவனின் இறுதிக் கிரியைகளுக்கான செலவுகளை தொழிலதிபர் எஸ். குணரத்தினம் ஏற்றுக்கொண்டார்.

விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களை பார்வையிட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சிறுவர்களின் நிலைமை குறித்து கேட்டறிந்து கொண்டதுடன் சிறுவர்களுக்கு உதவிப் பொருட்களையும் வழங்கி வைத்தார். (7-8-250)

# பொதுமக்களிடம் பணம் வசூலிக்கும் மனித உரிமைகள் பவுண்டேசனுக்கும் ஆணைக்குழுவிற்கும் தொடர்பு இல்லை

## வவுனியா அலுவலக பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் அண்மைக்காலமாக பொதுமக்களிடம் பணம் வசூலிக்கும் மனித உரிமைகள் பவுண்டேசனுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. இதனால் வரும் எவ்வித தடங்கல்களுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொறுப்பில்லை என்று வவுனியா அலுவலக பொறுப்பதிகாரி சட்டத்தரணி ஆர்.எல்.வசந்தராசா தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் மனித உரிமைக்குழு என்ற பெயரில் பல இடங்களில் பொதுமக்களிடம் பணம் வசூலிக்கும் குழு ஒன்று செயற்பட்டு வருகின்றது. இது தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பொறுப்பதிகாரியிடம் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது. வவுனியாவில் செயற்பட்டுவரும் மனித உரிமைகள் பவுண்டேசன் நிறுவனமே இந்நிறுவனத்திற்கும் எமது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் எவ்வித தொடர்புகளும் கிடையாது. அவர்களின் செயற்பாடுகள் வேறு, எமது செயற்பாடுகள் வேறு. அவர்கள் ஒரு பவுண்டேசனாகவே செயற்பட்டு வருகின்றனர். எனவே பொதுமக்கள் இவற்றைச் சரியாக புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். அந்நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கும் எமது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் எவ்வித தொடர்புகளும் கிடையாது. இதனால் வரும் இழப்புகளுக்கு நாங்கள் பொறுப்பு இல்லை என்பதை பொது மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த மனித உரிமைகள் பவுண்டேசன் என்ற பெயரில் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு பலரிடம் அடையாள அட்டைகள் பெற்றுக்கொள்வதற்கும் தொலைபேசி சிம் அட்டை போன்ற ஏனைய தேவைகளுக்கும் பணம்வசூலிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (7-8-250)

# தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அமைச்சின் நிதியொதுக்கீட்டில் குளம் புனரமைப்புப் பணிகள்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பரமன்கிராய் பகுதியில் உள்ள பரமன் கிராய் குளம் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் இரண்டு மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் யுத்தகாலத்தில் கைவிடப்பட்ட சேதமடைந்த குளங்களை புனரமைக்கும் பணிகள் பல்வேறு நிதியொதுக்கீடுகளின் கீழ் கமநலஅபிவிருத்தி திணைகளத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பூநகரி பரமன் கிராய் பகுதியில் சேதமடைந்து காணப்பட்ட பரமன் கிராய் குளத்தினைப்புனரமைத்துத் தருமாறு பிரதேச விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்தநிலையில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான செயலகத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ் இரண்டு மில்லியன் ரூபா செலவில் குறித்த குளத்தின் புனரமைப்பு பணிகள் மாவட்ட கமநல அபிவிருதி திணைக்களத்தினுாடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் உரிய முறையில் உரிய காலத்திற்குள் முன்னெடுக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள்கோரியுள்ளனர் (7-315)

# மது பானம் அருந்திய குடும்பஸ்தர் பலி

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிலுள்ள மாதர் பனிக்கர் மகிழங்குளம் பகுதியில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவரை நேற்று முன்தினம் இரவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளதாகவும் தற்போது சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா, ஓமந்தை மாதர் பனிக்கர் மகிழங்குளம் பகுதியில் வசித்து வந்த ஜெ. நிரோசன் 26 வயதுடைய குடும்பஸ்தர் உறவினர் ஒருவரின் பூப்புனித நீராட்டு விழா இடம்பெற்ற மறுதினமான நேற்று முன்தினம் இரவு மதுபான விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது.

அதில் கலந்துகொண்டு உறவினர்களுடன் இணைந்து மது அருந்திய நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த குடும்பஸ்தரை மது அருந்திய நண்பர்களால் அவரது வீட்டில் கொண்டு வந்து விடப்பட்டார். இரவு அவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அவரது மனைவி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். எனினும் வைத்தியசாலையில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த குடும்பஸ்தரின் உயிரிழப்பு அப்பகுதியில் பெரும் பரபரப்பை எற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-8-250)

# வவுனியாவில் சட்டவிரோத வைத்தியசாலை வடமாகாண சுகாதார அமைச்சரால் முற்றுகை



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் இயங்கி வருழ் தனியார் வைத்திய சாலைகள், மருந்தகங்கள், ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு நேற்று முன்தினம் காலை திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அங்கு இடம்பெற்றுவரும் நடவடிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ள வடமாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் அங்கு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்ட மருந்து வில்லைகளையும் கைப்பற்றியுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கும்போது,

வவுனியாவில் நேற்று முன்தினம் காலை முதல் பிற்பகல் வரை இரண்டு மருந்தகங்கள், இரண்டு தனியார் வைத்தியசாலைகள், மூன்று ஆயுள் வேத வைத்திய நிலையங்களுக்கு திடீரென்று விஜயம் மேற்கொண்டு இங்கு இடம்பெறும் நடவடிக்கைகளை அவதானித்துள்ளார். இதன் போது தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளை நிறுத்துமாறும் வைத்தியசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஆயுள் வேத வைத்தியசாலையில் சிகிச்சைக்குப்புறம்பான ஆங்கில மருந்து வில்லைகள் சிலவற்றையும் அங்கிருந்து மீட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (7-8-281)

# விடுதலைப் புலிகளின் தங்கத்தைத் தேடி வலைஞர் மடப்பகுதியில் அகழ்வுப் பணிகள்



(பனிக்கன்குளம்)

விடுதலைப் புலிகளின் தங்கத்தை தேடி வலைஞர் மடப்பகுதியில் நேற்று முன்தினம் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து நீதிமன்றத்தின் அனுமதியுடன் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின.

நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அகழ்வு நடவடிக்கை சுமார் 2 மணிநேரம் தொடர்ந்தது.

எனினும் அங்கிருந்து எவ்வித பொருட்களும் மீட்கப்படாத நிலையில் அகழ்வுப் பணிகள் நிறைவிற்குவந்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.(7-8-281)

# வவுனியாவில் பொலிஸாரை கௌரவிக்கும் நிகழ்வு





(பனிக்கன்குளம்)

நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தில் குற்றம், குற்றவியல் சட்டங்கள் மற்றும் கஞ்சா கடத்தல்களை முறியடித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் சிறப்பாக செயற்பட்ட பொலிஸாரை கௌரவிக்கும் நிகழ்வு ஓவியா விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் குற்றங்களை குறைக்கவும் குற்றவாளிகளை கைது செய்யவும் போதைவஸ்து ஒழிப்பு நடவடிக்கை மற்றும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை கைது செய்தமை, விபத்துக்களை தடுப்பதற்கு சிறப்பாக பணியாற்றிய போக்குவரத்து பொலிஸ் பிரிவினருக்கும் சமுதாய பொலிஸ் பிரிவினருக்கும, ஏனைய துறையைச் சேர்ந்தவர்களுக்கும் கௌரவிப்பு வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபர்தேசபந்து தென்னக்கோன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாண்டோ, வவுனியா மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகிந்த வில்லுவாராச்சி, வவுனியா மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் போன்ற பலரும் கலந்து கொண்டனர்.(7-281)

# கிராம உத்தியோகத்தர், ஆசிரியர் மோதல் மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்வு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு நெடுங்கேணி ஒலுமடு பகுதியில் ஆசிரியை ஒருவர் தனது காணியைச் சுத்தப்படுத்துவதற்கு சென்ற போது அப்பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள கிராம உத்தியோகத்தரினால் தாக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தின் கவனத்திற்கு ஆசிரியரால் கொண்டுவரப்பட்டுள்ளது. இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டுநீதியான விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியாவிலிருந்துநெடுங்கேணி, ஒலுமடுப் பகுதியிலுள்ள காணியினைத் துப்புரவு செய்துகொள்வதற்கு நீண்ட நாட்களின் பின்னர் ஆசிரியை ஒருவர் சென்றுள்ளார். அப்போது பக்கத்திலுள்ள காணி உரிமையாளர் அது எனது காணி என்று ஆசிரியையிடம் தெரிவித்துள்ளதுடன், அப்பகுதி கிராம உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு அழைத்துள்ளார். கிராம உத்தியோகத்தரும் சென்று ஆசிரியையுடன் கலந்துரையாடியதுடன் அது அரச காணி என்று கிராம உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து ஆசிரியைக்கும், கிராம உத்தியோகத்தருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன்போது கிராம உத்தியோகத்தர் தன் மீது தாக்கியதாக குறித்த ஆசிரியை மனித உரிமைக் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் பொலிஸ் நிலையத்தில் கிராம உத்தியோகத்தர் மீது தாக்குதல்நடத்தப்பட்டதாக முறைப்பாடு ஒன்றை கிராம உத்தியோகத்தர்மேற்கொண்டுள்ளார்.

இவ்விடயத்தில் பொலிஸார் பக்கச்சார்பாக செயற்படுவதாக குறித்த ஆசிரியர் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட போது பொலிஸாரிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி வினவிய போது,

இரு பகுதியையும் விசாரணைக்குட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பதில்பொறுப்பதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு கிராம உத்தியோகத்தரையும் ஆசிரியரையும் அழைத்து இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளது. (7-8-250)

# 610 பெண் தலைமைத்துவ குடும்பமும் 311 மாற்றுத் திறனாளிகளும் உள்ளனர்

## பிரதேச செயலகம் தகவல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் 610 பெண் தலைமைத்துவக்குடும்பங்களும் 311 மாற்றுத்திறனாளிகளும் காணப்படுவதாக பிரதேச செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படும் துணுக்காய் பிரதேசத்தில் 32 வரையான கிராமங்களை உள்ளடக்கிய 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் 3 ஆயிரத்து 942 இற்கும் மேறபட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 3 ஆயிரத்து 942 குடும்பங்களிலும் 610 வரையான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக காணப்படுகின்றன.

இதில் அதிகளவான குடும்பங்கள் அன்றாட வருமானங்கள் இன்றியும் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

கணவனால் கைவிடப்பட்ட நிலையிலும் யுத்தத்தின் போது காணாமல் போன கணவன்மாரை இழந்த நிலையிலுமே அதிகளவான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன. இதே வேளை யுத்தத்தின் போது அதிகளவில் பாதிக்கப்பட்ட மற்றும் விபத்துக்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட 311 வரை யான மாற்றுத் திறனாளிகளும் காணப்படுகின்றனர் என்பதும்குறிப்பிடத்தக்கது. (7-8-315)

# கலைத்தரிசனம்





## மரச்சிற்பக் கலைஞர் கலாபூஷணம் கந்தையா தவராசா அவர்களுடனான சந்திப்பு

"1951 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி யாழ்.அரியாலை மேற்கு கந்தையா-யோகம்மா தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்த இவர் சிறந்த மரச்சிற்பக்கலைஞராகத் திகழ்ந்து வருகின்றார். யாழ்.அரியாலை சிறிபார்வதி வித்தியாசாலை யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்விகற்று கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் 2002 ஆம் ஆண்டுவரை வருகை விரிவுரையாளராக கடமையற்றினார். இவர் தனது பதினைந்தாவது வயதிலேயே மரச்சிற்பத்துறைக்குள் ஈடுபடலானார். இத்துறையில் ஐம்பது வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார். நூறிற்கு மேற்பட்ட வாகனங்களை மரத்தில் செதுக்கி பல ஆலயங்களுக்கு வழங்கியுள்ளார். சிற்ப வேலைகளின் போது மனத்தை முழு அளவில் ஒருநிலைப்படுத்தி சிற்பங்கள் ஸ்திரமாகவும் பலமாகவும் இருக்கும் வண்ணம் செதுக்குவார். இவர் கலாபூஷண விருதையும் கலைஞானச் சுடர் விருதையும் பெற்றுள்ளார். மரச்சிற்பக்கலைஞர் கலாபூஷணம் க.தவராசா தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து வலம்புரிக்கு கூறியவை இங்கு பிரசுரமாகின்றது."

**➢ கலாபூஷணம் கந்தையா தவராசா அவர்களே! இந்தசிற்பத்துறைக்குள்ளான உங்கள் பிரவேசம் எவ்வாறு அமைந்தது?**

எனது விபரம் தெரிந்த நாளிலிருந்தே இந்த சிற்பத்துறையுடனான தொடர்பு எனக்கு ஏற்பட்டிருந்தது. ஏனென்றால் எனது அப்பாவின் தந்தையார் வல்லிபுரம் சிற்பத் துறையில் மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்தவர். மிக அமைதியானவர். எப்போதும் சிற்பம் செய்வதிலே ஆர்வ முடையவராக இருந்தார். தச்சுத்தொழிலே இவரது பிரதான தொழிலாக இருந்தது. கூரை வேலை செய்வதில் மிக வல்லவராக இருந்தார். அத்துடன் சிற்பங்களை (மரங்களில்) செய்வதும் இவருக்குக் கைவந்த கலையாக இருந்ததனால் ஓய்வு நேரங்களில் மரத்தினாலான சிற்பங்களை செதுக்கிக் கொண்டேயிருப்பார். தேருக்குரிய பொம்மைகள், யாழிகள் என்பவற்றை அழகாக செய்து வர்ணந்தீட்டி வைப்பார். கோவிலுக்கான முழு அளவிலான தேரையும் இவர் செய்திருந்தார். இவரைத் தொடர்ந்து எனது தந்தையாரும் இந்த சிற்ப வேலையைத் தொடர்ந்து ஆற்றி வந்தார். எனது தந்தையாருக்கு கந்தையா என்பது தான் இயற் பெயராக இருந்த போதும் மக்களால் நன்கு அறியப்பட்ட பெயராக 'மணியம் மாஸ்ரா' என்ற பெயரே விளங்கியது. இவர் யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள பல் தொழில் நுட்பக் கல்லூரியில் மரவேலை பாட ஆசிரியராக பணிபுரிந்தவர். இவரும் சிற்பக் கலையிலே மிக வல்லவராக விளங்கினார். இந்த சிற்பக்கலைச் சிறப்புக் காரணமாக இவருக்கு 2006 ஆம் ஆண்டு கலாபூஷணம் விருது வழங்கப்பட்டது. அத்துடன் சிற்பவாரிதி, கலைப் பேராசான் போன்ற விருதுகளும் வழங்கப் பெற்றிருந்தன.

இவர் தனது வாழ்நாளில் ஏராளமான சிற்பங்களை செதுக்கி அதனூடே மக்களிடம் பெரிதும் அபிமானம் பெற்றவராக விளங்கியிருந்தார். ஆலயங்களுக்கான மஞ்சம், தேர் என்பவற்றுடன் மயில், குதிரை, சிங்கம், புலி, யானை, கிளி ,அன்னம், கடா, நாய் என பல்வேறு வகையான வாகனங்களை செதுக்கி ஆலங்களுக்கு வழங்கியுள்ளார். விசேடமாக சூரன், இடும்பன் ஆகியோரின் சிலைகளை மிகவுத் தத்ரூபமாகச் செய்துள்ளார். சூர சிற்பத் தின் தலையை ஆட்டுவதற்கேற்ற வ்கையில் மிக எளிதாக அவற்றை ஆக்கியிருந்தார். இப்படியாக அப்பப்பாவும் அப்பாவும் சிற்பம் செதுக்கும் அந்த நிலையம் எங்கள் வீட்டு வளவிலேயே அமைந்திருந்தது. இதன் காரணமாக நான் எப்போதும் அவர்கள் சிற்பம்செதுக்கும்பணியைபார்வையிடுவேன். அதன் காரணமாகவே இந்த சிற்பத்துறைக்குள்ளான எனது ஈடுபாடு ஏற்பட்டது.

**➢ சிற்பத் தொழில் மூலம் எந் தெந்த இடங்களில் எவ்வெவ் வகையான சிற்பங்களை நீங்கள்ஆக்கியுள்ளீர்கள் எனக் கூறுங்களேன்?**

இத்தொழிலிலே ஐம்பது வருட அனுபவம் இருக்கின்ற இந்த காலப்பகுதியில் சுமார் நூறுக்கும் மேற்பட்ட வாகனங்களை ஆலயங்களுக்கு செய்து வழங்கியுள்ளேன். அரியாலை மேற்கில் அமைந்துள்ள வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கு பாம்பு, கிளி, மயில் போன்ற வாகனங்களை செய்துள்ளேன். செம்மணி பேச்சியம்மன் கோவிலுக்கு சிங்கம், யானை, மான் போன்ற வாகனங்களை செதுக்கியளித்துள்ளேன். அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயத்துக்கான சகலவகையான வாகனங்களையும் செய்து கொடுத்துள்ளேன். பாம்பு, யானை, சிங்கம், புலி, எருது, மயில், கிளி எனவாக அவை தொடரும். இலந்தைக்குளம் வீதி அரியாலை மகாமாரி அம்மன் ஆலயத்துக்கும் இவ்வாறே இறைவி எழுந்தருளும் வாகனங்கள் வகையோடு இடும்பன் என்ற உருவையும் செதுக்கியு ள்ளேன்.

அல்வாய் வடக்கு அரசடிப்பிள்ளையார் ஆலயத்திற்கான தேர் ஒன்றினை அத்தேர் த் திருவிழா உபயகாரர்களில் ஒருவரான சி. கதிரவேலு கேட்டுக்கொண்டதன் பிரகாரம் செய்து கொடுத்துள்ளேன். அத்துடன் சூரன், சிங்கம், தேர்க் குதிரைகள் இரண்டு என செய்தளித்துள்ளேன். இன்னும் இன்னும் ஏராளமான வாகனங்களை ஆலயங்களுக்கு செய்து வழங்கியுள்ளேன்.

**➢ இப்படியான சிற்பங்களை ஆக்குவதற்காக தேர்ந்தெடுக்கும் மரங்கள், ஏனைய பொருட்கள் தொடர்பாக கூறுங்கள்?**

சிற்பங்கள்ஸ்திரமாக, பலமாகஇருக்கவேண்டும் என்பதற்காக வேம்பமரத்தையே நாங்கள் தேர்வு செய்வோம். மேலும் செதுக்குவதற்க் ஏற்ற வகையில் அமைந்துள்ள மரமான பலா மரத்தையும் நாங்கள் பாவிப்பதுண்டு. அன்றைய நாட்களில் துளையிடல், அரிதல் போன்ற பல்வேறு வேலைகளையும் கைகொண்டு பாவிக்கும் ஆயுதங்களின் உதவியுடன் செய்து வந்தோம். ஆனால் இப்போது அவற்றுக்கெல்லாம் இயந்திரங்கள் ஏற்ற வகைகளில் கிடைக்கப்பெற்றுள்ளதால் அவற்றைக் கொண்டு செய்து வருகின்றோம். ஆனாலும் மிக அவதானத்துடனும் மனத்தை முழு அளவில் நடுநிலைப்படுத்தியுமே இந்த வேலையை செய்கிறோம்.

ஒரு சிற்பத்தை செதுக்க ஆரம்பிக்கும் போது நல்ல நாள் பார்த்து சுபவேளையிலே சமயாசாரப்படி கும்பம் வைத்து குத்துவிளக்கேற்றி தொடங்குவோம். சிற்பம் செய்ய தேர்வான மரத்தை பார்த்ததுமே அந்த மரத்தில் நாங்கள் செய்யப்போகும் சிற்பத்தை எங்கள் மனக்கண்ணால் கண்டு விடுவோம். எங்கள் மனக்கண்ணில் தெரிந்த சிற்பத்தை அப்படியே வெளிக்கொணருவதற்காக அந்த மரத்தில் உள்ள தேவையற்றவற்றை நீக்கி விடுவோம்.

இன்னும் அந்த சிற்பம் காட்டும் பாவம் அதில் வரும் வகையில் செய்வதிலே தான் முழு வெற்றியுமே தங்கியுள்ளது. நடிகர்கள் நடனமாடுவோர் எப்படி தங்கள் முகங்களிலே பாவங்களை வெளிக்காட்டுகிறார்களோ அவ்வாறே இந்த சிற்பங்களும் பாவங்களை வெளிக்காட்ட வேண்டும். வீரம், அன்பு, கருணை, பயம், குழைவு, சாந்தம் என்ற வகைகளை தேவையான இடத்தில் வெளிக்காட்ட வேண்டும். தெய்வாம்ச நிலையில் வைத்து கணிக்கப்படும் இவ் உருக்களை கைகள் கூப்பி தொழ வைக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு சிற்பக்கலைஞனதும் நோக்காக இருக்க வேண்டும்.

சூரன் சிலை ஆக்கப்படல் வேண்டுமானால் அவருக்குரிய நெற்றி, பல், வாய், கைகளில் உள்ள ஆயுதங்கள், கோரவெறி கொண்டதான கண்கள் என்பன அப்படியே அமைய வேண்டும். அப்போது தான் அந்த உருவம் முழுமை பெறும்.

**➢ இதுவரை நீங்கள் ஆக்கிய சிற்பங்களில் உங்களை மிகவும் கவர்ந்த எல்லோராலும் போற்றப்பட்ட, போற்றப்படுகின்ற சிற்பமாக நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?**

பொதுவாக அனைத்து சிற்பங்களுமே என் மனதுக்கு திருப்தி தருவதாகவே அமைந்திருந்தன. இருந்தபோதும் நெடுந்தீவில் உள்ள பிள்ளையார் கோவில் ஒன்றுக்காய் ஒரு குதிரையைச் செதுக்கி கொண்டு சென்று கோவிலில் இறக்கிய போது அங்குள்ள மக்கள் எல்லோருமே ஓடி வந்து பார்த்து பரவசமடைந்து நின்றபோது எனது மெய் சிலிர்த்தது. அந்த அளவுக்கு அந்த மக்கள் அந்தக் குதிரையை ரசித்தார்கள். நெடுந்தீவு குதிரைகள் நிறைந்த ஊரான படியால் அவர்கள் இதில் எது செதுக்கிய குதிரை, எது உயிர்க் குதிரை என்று கேட்டார்கள். நான் செதுக்கிய குதிரையைக் காட்டி இதை கத்தியால் வெட்டிப்பாருங்கள் இரத்தம் வரும் என்று கூறிய போத அவர்கள் வியந்தே போனார்கள். நாங்கள் சிற்பம் செதுக்க முன்பு எப்படி பூசை வழிபாடுகளுடன் அவற்றை ஆரம்பிக்கின்றோமோ அப்படியே தான் அந்த சிற்பங்களை வழியனுப்பி வைக்கும்போதும் பூசை வழிபாடுகளுடனேயே வழியனுப்பி வைப்போம். இச் சிற்பங்கள் அனைத்தும் தெய்வாம்ச நிலையில் வைத்து பூசிக்கப்படுவதால் மிகவும் ஆசாரமாகவே இத் தொழிலை செய்து வருகின்றோம். எனது மாணவப் பருவத்திலிருந்தே இச் சிற்பம் செதுக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றேன். மனதுக்குத் திருப்தி தரும் ஒரு தொழிலாகவே இதைப் பார்க்கிறோம். எங்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி இத் தொழிலைச் செய்கின்றபோது நாம் எண்ணிய உருவம் அதில் வரும்.

**➢ இத்துறை சார்ந்து நீங்கள் பெற்றுக் கொண்ட விருதுகள், மதிப்பளிப்புகள் என்பன தொடர்பாக சொல்லுங்கள்?**

விருதுகள் எனும் போது அரச விருதான 'கலாபூஷண' விருது 2012 ஆம் ஆண்டு எனக்கு கிடைக்கப்பெற்றது. அத்துடன் 2010 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச சபையினால் 'கலைஞானச்சுடர்' விருதும் கிடைக்கப் பெற்றது. மேலும் ஒவ்வொரு சிற்பங்களையும் செதுக்கி ஆலயங்களுக்கு கொண்டு சென்று வழங்கும் போது ஆலய நிர்வாகிகளால் மற்றும் பூசை உபயகாறர்களால், அங்குள்ள பிரமுகர்களால் மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டேன். அவ்வேளைகளிலெல்லாம் எனது மனம்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

**➢ எங்களால் ஆக்கப்படும் (சிற்பங்கள்) வாகனங்களில் இறைவனே எழுந்தருளுகிறார் எனும் போது இவற்றை பெரும் பேறாகவே நாம் கருதுகிறோம். உங்களோடு இணைந்து இத் தொழிலில் யாராவது உள்ளார்களா?**

எங்கள் நான்காவது தலைமுறையாக எனது மகன் த.மயூரன் இப்போது இச் சிற்பம் செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார். அவர் இத்துறையிலே மிகவும் பாண்டித்தியம் பெற்றுள்ளார் என்பதை காண முடிகின்றது. இவரால் செதுக்கப்பட்ட சிற்பங்கள் பல இங்கிருந்து நோர்வே நாட் டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எலி, சிங்கம், எருது, பாம்பு என பல்வேறுபட்ட வாகனங்களை இவர் செதுக்கியுள்ளார். அத்துடன் பூதம் என்ற சிற்பம் இவருக்கு மிக பெருமை சேர்த்துள்ளது. இளைய தலைமுறையைச் சேர்ந்தவர் என்பதால் இவரிடம் சிந்தனை ஆற்றல், வேகம் என்பனவற்றுடன் நவீனத்துவமான வசதிகளும் சேர்ந்துள்ளதால் இத் தொழிலில் இவர் சிறந்து விளங்குவதைக் காண முடிகின்றது. இவரோடு இளந்தலைமுறையினர் பலர் யாழ்.திருநெல்வேலியைச் சேர்ந்த எனது உறவினர்களும் ஈடுபட்டு வருகின்றார்கள். மேலும் நாங்கள் செய்கின்ற வாகனங்களுக்கு வெள்ளி பதித்தல் வேலைகளை வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கங்காதரன் ஆற்றி வந்தார். மிகத் தத்ரூபமாக அவர் இவ்வேலையை செய்திருந்தார். அவர் இப்போது அமரராகிவிட்டார்.

**➢ உங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவங்கள் என்று ஏதாவது இருந்தால் சொல்லுங்களேன்.?**


எனது தந்தையார் நாவலர் தினம் தொடர்பான கண்காட்சி ஒன்றிற்காய் 1981ஆம் ஆண்டளவில் பெரிய அளவிலான நாவலர் சிலை ஒன்றை செய்து கடற் கப்பல் ஒன்றில் நிறுத்தி கண் காட்சி அரங்கில் வைத்த போது அதற்கு கிடைத்த வரவேற்பு என்பது மறக்க முடியாதது. யாழ். நகரில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு யாழ்.க்னகரத்தினம் ம.வி. சார்பாக செய்யப்பட்ட இவ் உருவம் முதற் பரிசைப் பெற்றிருந்தது.

யாழ்-கொக்குவிலில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் கேடயம் ஒன்று செய்து சரஸ்வதி சிலை ஒன்றை அமைத்துள்ளார். அதை கொழும்பு கல்வி அமைச்சின் முன்பாக 30 நீளம் கொண்ட மரத்தினாலான சங்கிலி ஒன்றை செதுக்கி வைத்துள்ளார். அதை இப்பொழுதும் காணக்கூடியதாக உள்ளது. யாழ்.கனகரத்தினம் ம.வியில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் மண்ணிலே செய்த குதிரை ஒன்றை காட்சிப்படுத்தியிருந்தார். இதுவும் மக்களின் பாராட்டைப் பெற்றிருந்தது. மேலும் மேசை விளக்கு ஒன்றி னு ள்ளே பெண்ணின் சிற்பம் ஒன்றை வைத்து அதற்குள்ளால் மின் இழையைப் பொருத்தி ஒளியேற்றி யாழ்.கனகரத்தினம் ம.வியில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் வைத்த போது மிகவும் பாராட்டுக் கிடைத்தது. அத்துடன் யாழ்.கனகரத்தனம் ம.வியின் நிறுவுநர் கனகரத்தினத்தின் திருவுருவச்சிலை ஒன்றினை சிவப்பிரகாசம் ஐயாவுடன் சேர்ந்து சீமெந்தினால் வடித்து பாடசாலை முன்றலில் நிறுவியுள்ளார். அந்த சிலை தற்போதும் உள்ளது. இவற்றைப் பார்க்கும் போதெல்லாம் எனது தந்தையாரின் செயற்றிறன், ஆர்வம் எல்லாம் என் நினைவுக்கு வரும் மண் ணிலே, கடதாசியிலே, மரத்திலே சிற்பங்களை ஆக்கி தன் நினைவின் எச்சங்களாக அவர்விட்டுச் சென்றுள்ளார். இவை எல்லாம் மறக்க முடியாத சம்பவங்களே.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# பெண்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நிலையான சமாதானம் சாத்தியப்படாது!

## போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் சுட்டிக்காட்டு





(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின், பெண்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். பெண்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியாதென போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில், யாழ். கிறீன்கிராஸ் விருந்தினர் விடுதியில் மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஏன் அதிகரிக்க வேண்டுமென்ற தொனிப்பொருளில் பெண்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி விசாகா தாம்தாச கலந்துகொண்டு, பெண்களின் பிரதிநிதித்துவம் ஏன் அதிகரிக்கப்பட வேண்டும். தேர்தலில் பெண்களின் பங்களிப்புக்கள் தொடர்பில் பல கருத்துக்களைத் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில், வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், கேசவன் சயந்தன், அயூப் அஸ்மின் ஆகியோர் கலந்துகொண்டு பெண்களின் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவம் மற்றும் பெண்களின் பங்களிப்புக்கள் தொடர்பான தமது கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர்.





இதன்போது, நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது பெண்களின் பங்களிப்பு 23 வீதம் வழங்கப்பட்டமை எதிர்வரும் காலங்களில் 50 வீதமாக வழங்கப்பட வேண்டுமென்றும் ஆண்களால் 100 இற்கு 100 வீதம் அரசியலில் பங்களிப்புச் செய்ய முடியுமெனின் ஏன் பெண்களால், 100 இற்கு 100 வீதம் பங்களிப்புச் செய்ய முடியாது.

திருமணமானவராயின் கணவனின் அனுமதியுடனும், குடும்பத்தாரின் ஒத்துழைப்புடனும் அரசியலில் பிரவேசித்து பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேசக்கூடிய அந்தஸ்தைப் பெற வேண்டும். பெண்கள் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும். பொருளாதார சமத்துவத்தினை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் கட்சி என்ற ஒன்று உருவாக்கப்பட வேண்டும். ஸ்மார்ட் 75 என்ற அமைப்பின் ஊடாக வடமாகாண பெண்கள் தமது பிரச்சினைகளையும் அரசியல் பங்களிப்பினையும் முன்னெடுக்க உருவாகிய அமைப்பின் ஊடாக இன்னும் பெண்கள் மத்தியில் அரசியல் ஆர்வத்தினையும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் பிரச்சினைகளை அறிந்து ஆராய்ந்து, தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், அரசியலில் பெண்களின் பங்களிப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தனர்.

அதற்குரிய வாய்ப்புக்களை பெண்களுக்கு வழங்க ஆண்கள் முன்வர வேண்டுமென்பதுடன், கட்சிகள் முன்வர வேண்டுமென்றும் ஸ்மார்ட் 75 அமைப்பில் அங்கம் வகிக்கும் பெண்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்காலத்தில் பெண்கள் கட்சிகள் உருவாக்கப்பட்டு, பெண்களின் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்புக்களை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதற்குரியவாறு, செயலாற்ற பல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென்பதுடன், எதிர்காலத்தில் அரசியலில் பெண்களின் விகிதாசாரம் அதிகரிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் எடுத்துள்ளனர்.

இந்தக்கலந்துரையாடலில், வட மாகாணத்தைச் சேர்ந்த தமிழ்-சிங்கள-முஸ்லிம் பெண்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் அங்கம் வகிக்கும் பெண் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-89-101)

# கொழும்பு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் எமக்கும் வழங்கப்பட வேண்டும்

## யாழ்.மாநகர சபையில் த.தே.கூ. உறுப்பினர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் போன்று யாழ்.மாநகரசபை முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்கான சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையின் 6 ஆவது அமர்வு நேற்று முன்தினம் மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாநகர சபை முதல்வருக்குரிய சலுகைகள் தொடர்பான விடயம் சபையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்கண்டவாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக உறுப்பினர் ப.தர்சானந் தெரிவிக்கையில், மாநகரசபைக் கட்டளைச்சட்டத்தின் படி முதல்வருக்குரிய சலுகைகள் அனைத்தும் வழங்கப்படவேண்டும். இதைத் தீர்மானமாக நிறைவேற்றி உள்ளூராட்சி அமைச்சரிடம் அனுமதி பெறவேண்டும்.

கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களுக்கான சலுகையில் தொலைபேசிக் கட்டணச் செலவு 6 ஆயிரம் ரூபாவும் போக்குவரத்துச் செலவு 6 ஆயிரம் ரூபாவும் முத்திரைச் செலவு ஆயிரம் ரூபாவும் எமக்கு வழங்கப்படும் 20 ஆயிரம் ஆயிரம் ரூபாவும் உள்ளடக்கப்பட்டு 33 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டும் என 45 உறுப்பினர்கள் சார்பாக குறித்த தீர்மானத்தை முன்மொழிவதாகத் தெரிவித்தார்.

குறித்த தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் வி.மணிவண்ணன், தமது கட்சி சார்பாகக் கருத்தை முன்வைத்தார். நாம் சலுகைகள் பெறப்போவதில்லை என்றே தேர்தல் காலத்தில் மக்களிடம் கூறியிருந்தோம். எனவே எமக்கு இவ்வாறான சலுகைகள் தேவையில்லை எனத் தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக கருத்து தெரிவித்த உறுப்பினர் மு.றெமீடியஸ், தற்போது இவ்வாறான சலுகைகளை நாம் எதிர்பார்க்கவில்லை. குறித்த பிரேரணையைவாபஸ்பெறவேண்டும். இதற்கு எமது உறுப்பினர்கள் உடன்பட மாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

இது உறுப்பினர்களின் சிறப்புரிமை தொடர்பான விடயம். உறுப்பினர்கள் சலுகை பெறுவதால் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அபிவிருத்தியில் தடை ஏற்படப்போவதில்லை. எனவே அனைவரும் ஒற்றுமையுடன் இந்த விடயத்தில் செயற்படுங்கள் என சபை முதல்வர் ஆனோல்ட் ஆலோசனை வழங்கினார். (இ-9)

# உயர் மின் அழுத்த மின்கம்பங்களை அகற்றுக

## மின்சார சபைக்கு மக்கள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

உயர்மின் அழுத்த மின்கம்பிகள் செல்வதற்காக நாட்டப்பட்டமின்கம்பங்களை அகற்றுமாறு இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதிப் பொது முகாமையாளருக்கு ஐங்கரன் வீதி (அரசடி, விளாத்தியடி), பொதுமக்கள் அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்து வருகின்ற மின்சார தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் 24 மணி நேர தொடர்ச்சியான மின்சார சேவையினை மக்களுக்கு வழங்குதற்கும் எடுத்து வருகின்ற நன் முயற்சியானது பாராட்டுக்குரியதே. எனினும் இம் மின்சாரமானது உயர் மின் அழுத்த மின்கம்பிகளினூடாக (Overhead) சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை குறுகிய பாதையூடாகக்கொண்டுசெல்லப்படுகின்றது என்பது பற்றி பொதுமக்களாகிய நாங் கள் அறிந்திருக்கவில்லை எனவும் மேலும் எமது குடிமனைகளுக்கு அருகாமையில் உள்ள குறுகிய வீதிகளினூடாக உயர்மின் அழுத்த மின்சாரம் செல்ல இருக்கின்றது என்பது பற்றி எந்தவித முன்அறிவித்தல் எதுவும் வழங்கப்படவில்லை என்பதையும் தற்போது இந்த விடயம் தொடர்பாக ஊர் மக்களாகிய நாங்கள் பாரிய அச்சத்துடனும் மன அழுத்தத்துடனும் இருக்கின்றோம் என்பதை தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகின்றோம்.

குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு (RDA) உட்பட்ட பிரதேசமாக இருந்தாலும் உயரப்புலம் ஆனைக்கோட்டை ஐங்கரன் வீதியானது மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதியாகவும் மக்கள் அடர்த்தி கூடிய பிர தேசமாகவும் உள்ளது.

இவ்வீதியை அண்டிய பகு திகளில் தொடர்ச்சியாக குடி மனைகள் செல்கின்றது என்பதையும் இவ்வீதியானது போக்குவரத்துக்கு இடைஞ்சல் என்பதனையும் இவ்விடத்தில்பனை தென்னைகளை வாழ்வாதார மாகக் கொண்டு வாழுகின்ற மக்கள் அதிகமுள்ளார்கள் என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

மேலும் நாட்டப்பட்டுள்ள உயர் அழுத்த மின்கம்பமானது ஒரு நேர்வடிவில் அல்லாது அலை வடிவில் (zig-zag) நாட்டப்பட்டுள்ளது என்பதையும் உயர்மின் அழுத்த மின்கம்பிகள் இழுக்கப்படுகின்ற போது அந்த மின்கம்பங்களுக்குதேவையானபூரணமான எந்த ஒரு உறுதிப்பாடும் (Guy or Strut) வழங்கப்படவில்லைஎனவும்மேலும் அவ் வாறு உறுதிப்பாடு வழங்குகின்றபட்சத்தில் அதற்குத் தேவையான நிலப்பரப்பு குடிமனைகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பில் இருந்துதான் பெறப்பட வேண்டும் என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

மேலும் இவ் உயர் அழுத்த மின்சாரம் செல்வதால் அதிலிருந்து உருவாக்கப்படுகின்ற கதிர்வீச்சானது (Radiation) பொதுமக்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தாங்கள் நன்கு அறிந்ததே. எமது எதிர்கால சந்ததியினருடைய வாழ்வை வளம்பெறச் செய்வதும்வருங்காலம் குறைபாடுகளற்ற சந்ததியினரை உருவாக்க வேண்டும் என்பதில் அக்கறை கொள்வதும் இக்கால சந்ததியினரின் பாரிய கடமைகளில் ஒன்று என்பதையும்தங்களுக்கு தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றோம்.

மேலும் குறிப்பிட்ட ஒரு கிலோ மீற்றர் பகுதிக்கு மக்கள் அடர்த்தி அதிகமாகவுள்ள சிறிய பாதையூடாக வளைந்த வடிவில் (zig-zag) இம் மின்சாரக் கம்பங்கள் நாட்டப்பட்டிருக்கின்றன.

எனவே மக்களினுடைய வாழ்வாதாரத்திற்கு எந்த இடையூறும் ஏற்படாதவாறு மக்களுடைய பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டும் எதிர்காலத்தில் இப் பிரதேசத்தில் குறைபாடுகளற்ற வளமான ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு தற்போது நாட்டப்பட்டிருக்கின்ற மின்கம்பங்களை அகற்றித் தருமாறு கேட்டுக்கொள்வதோடு இப் பாதையூடாக உயர்மின் அழுத்த மின்சாரத்தினை கொண்டு செல்லாமல் வேறு பொருத்தமான பாதைக்கு மாற்றியமைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரின் பிரதிகள் வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர் உள்ளிட்டோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ

# கழிவு சேகரிப்பு நிலையங்கள்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் 2 ஆம் வட்டார உறுப்பினர் மதுசுதனிடம் பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கோண்டாவில் மத்தி பகுதியில் திண்மக் கழிவகற்றலை வினைத்திறனாக்கி மேம்படுத்துவதற்காக புதிய திண்மக் கழிவு சேகரிப்பு நிலையங்கள் அவரால் அப்பிரதேசத்தில் மக்கள் பாவனைகளுக்காக வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கு செயலாளர் சுதர்ஜன் துரித நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

அத்தோடு மக்களுக்கு கழிவுகளை தரம் பிரித்து இடுமாறும், இந்தச் சேகரிப்பு நிலையம் தவிர்ந்த ஏனைய இடங்களில் கழிவுகள் கொட்டப்படாது சுத்தமாகப் பேணுமாறும் அறிவுறுத்தப்பட்டதோடு ஒவ்வொரு நாளும் கழிவுகளை அகற்ற மதுசுதனால் ஆவன செய்யப்பட்டது. (இ-7)

# வட இந்தியாவில் நிலச்சரிவு 10 ஆயிரம் பேர் இடப்பெயர்வு



(மும்பை)

வட இந்தியாவின் பல பகுதிகளிலும் தொடர்ந்து அடைமழை பெய்துவருவதால் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பல பிரதேசங்கள் நிலச்சரிவு அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம், யமுனா நதிக்கரையைச் சூழ வாழும் 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறி மேட்டு நிலப் பகுதிகளில் தற்காலிக கூடாரங்களை அமைத்துள்ளனர்.

அடுத்த வாரமும் குறித்த அசாதாரண காலநிலை தொடரவுள்ளமையால், நீர் மட்டம் மேலும் உயரும் அபாயம் காணப்படுவதாக உத்தரபிரதேச மாநில நிவாரண ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரை ஏற்பட்டுள்ள புயல், வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் 1500 இற்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய அரசாங்கத்தின் கவனம் நிவாரணம் வழங்குவதிலேயே உள்ளது. எனினும், முன்கூட்டிய எச்சரிக்கை, முற்பாதுகாப்பு செயற்பாடுகள் போன்றவற்றில் கவனயீனத்துடன் செயற்படுவதாக பல்வேறு தரப்பினர் விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-8)

# கருணாநிதியின் உடல்நலம் குறித்து நடிகர் விஜய் நலம் விசாரிப்பு



(சென்னை)

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியின் உடல் நலம் குறித்து நடிகர் விஜய் கேட்டறிந்துள்ளார்.

கருணாநிதி அனுமதிக்கப்பட்டிருக்கும் ஆழ்வார்பேட்டை காவேரி வைத்திய சாலைக்கு நேற்று புதன் கிழமை முற்பகல் சென்ற விஜய், கருணாநிதியை பார்வையிட்டுள்ளார். அதன் பின்னர் அவரது உடல் நலம் குறித்து ஸ்டாலினிடம் கேட்டறிந்துள்ளார்.

கடந்த ஐந்து நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கருணாநிதியை பல்வேறு தரப்பினரும் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

கருணாநிதியின் உடல் நிலை தற்போது சீராக உள்ளதென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7-8)

# கருணாநிதி சுயநினைவுடனேயே உள்ளார்

## மகன் மு.க.அழகிரி தெரிவிப்பு

(சென்னை)

தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி சுயநினைவுடனேயே உள்ளாரென அவரது புதல்வர் மு.க.அழகிரி தெரிவித்துள்ளார்.

காவேரி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் கருணாநிதி சுயநினைவை இழந்துவிட்டதாக தகவல்கள் பரவி வருகின்றன.

இந் நிலையில், அவரை சென்று பார்வையிட்ட பின்னர், அழகிரி இதனைத் தெரிவித்தார்.

மதுரையில் வசித்து வரும் அழகிரி, தந்தை கருணாநிதியின் உடல்நிலை பாதிக்கப்பட்ட பின்னர் சென்னைக்கு திரும்பியுள்ளார். அடிக்கடி வைத்தியசாலைக்குச் சென்று கருணாநிதியின் உடல்நிலை குறித்து விசாரித்து வரும் அவர், வெளிநாட்டு மருத்துவர்களுடன் ஆலோசனை நடத்தி வருவதாகவும் அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆழ்வார்பேட்டை காவேரி வைத்தியசாலையில் கடந்த ஐந்து நாட்களாக அனுமதிக்கப்பட்டுவரும் கருணாநிதியை, அரசியல் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள் என ஏராளமானோர் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

வைத்தியசாலைக்கு முன்பாக குவிந்துள்ள அவரது தொண்டர்கள், கருணாநிதி விரைவில் நலம் பெற வேண்டுமென பிரார்த்தித்து வருகின்றனர். (7-8)

# ஜப்பானில் இயற்

## ஒரே மாதத்தில்



(டோக்கியோ)

ஜப்பான் நாட்டை கடந்த மாதத்தில் தொடர்ந்து தாக்கிய மழை, வெள்ளம், வெப்பம் மற்றும் புயலால் 300 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஜப்பான் நாட்டின் பல பகுதிகளில் கடந்த மாதத்தின் முற்பகுதியில் பெய்த பெரு மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச் சரிவில் சிக்கி 220 இற்கும் அதிகமானவர்கள்

# பாதுகாப்புப்படை

## 5 கிளர்ச்சியா

(கெய்ரோ)

எகிப்து பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் கிளர்ச்சியாளர்கள் 5 பேர் சுட்டுகொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எகிப்தில் இஸ்லாமிக் பிரதர்ஹுட் கட்சியை சேர்ந்த முகமது முர்சியின் ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற பெரும் திரளான மக்கள் போராட்டத்தின் விளைவாக கடந்த



# பயங்கரவாத

## 15 பேர் உயி



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அரசு அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்டு பலரை சிறைபிடித்த பயங்கரவாதிகளுக்கும், அதிரடி படைக்கும் நடந்த மோதலில் 15 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அகதிகள் நலவாழ்வு இயக்குநரகம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தில் வெளிநாட்டில் இருந்து நிதி அளிப்பவர்கள் மற்றும் துறை அதிகாரிகளுக்கு இடையேயான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

# ற்கையின் கோரத்திற்கு
# ல் 300 பேர் உயிரிழப்பு



உயிரிழந்தனர்.

இதனைத்தொடர்ந்து, கடந்த வாரத்தில் இருந்து ஜப்பானின் பல மாகாணங்களை வறுத்தெடுத்துவரும் 104 டிகிரி வெயிலின் வெப்பத்தை தாக்குப்பிடிக்க முடியாமல் 116 பேர் மாரடைப்பு மற்றும் மூச்சுத்திணறலால் உயிரிழந்துள்ளனர்.

போதாக்குறைக்கு சமீபத்தில் வீசிய புயலால் சிலர் உயிரிழந்துள்ளனர். ஒட்டு மொத்தமாக இந்த மாதத்தில் மட்டும் ஜப்பானில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் கடந்த 1982ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்நாடு சந்தித்துள்ள மிகப்பெரிய பேரழிவாகும் என உள்நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (7-8)

# 100 பயணிகளுடன் சென்ற விமானம் விபத்தில் சிக்கி தீப்பற்றி எரிந்தது

## 85 பேர் படுகாயம்

(மெக்சிகோ)

மெக்சிகோவில் 97 பயணிகள் மற்றும் 4 ஊழியர்கள் உட்பட 101 பேருடன் புறப்பட்ட விமானம் திடீர் விபத்தில் சிக்கி தீப்பிடித்து எரிந்தது.

மெக்சிகோ நாட்டின் வடக்கு மாகாணமான டூராங்கோவில் உள்ள விமான நிலையத்தில் இருந்து 97 பயணிகள் மற்றும் 4 ஊழியர்கள் உட்பட 101 பேருடன் ஏரோமெக்சிகோ எனும் விமானம் மெக்சிகோ சிட்டியை நோக்கி புறப்பட்டது.

ஆனால், ஓடுதளத்தில் இருந்து விமானம் புறப்பட்ட சில நொடிகளிலேயே திடீர் விபத்தில் சிக்கி தீப்பிடித்து எரிந்தது.

இந்த விபத்தில், விமானத்தில் பயணம் செய்த 85 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.


அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து குறித்து டூராங்கோ மாகாண ஆளுநர் ஜோஸ் ரோசாஸ் ஊடகங்களிடம் கூறுகையில், விமானம் புறப்படும் போது நிலவிய மோசமான வானிலை காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளது.

புறப்பட்ட சில நொடிகளிலேயே விபத்து ஏற்பட்டதால், விமான நிலையத்திற்கு அருகே உள்ள நிலத்தில் விமானம் அவசர அவசரமாக தரையிறப்பட்டது. இந்த விபத்தில் உயிரிழப்பு போன்ற அசம்பாவிதங்கள் நிகழவில்லை' என தெரிவித்தார். (7-8)



# டயினர் துப்பாக்கிச்சூடு
# ாளர்கள் உயிரிழப்பு!



2013ஆம் ஆண்டு அவர் ஜனாதிபதி பொறுப்பில் இருந்து அகற்றப்பட்டார். இதைத் தொடர்ந்து, 2016ஆம் ஆண்டு முதல் அந்நாட்டில் ஹஸ்ம் எனும் கிளர்ச்சிக் குழு வேர் விடத்தொடங்கியுள்ளது.

இந்நிலையில், தலைநகர் கெய்ரோவின் வடக்கு பகுதியில் உள்ள கல்யூபியா மாகாணத்தில் எகிப்து பாதுகாப்பு படையினர் நடத்திய அதிரடி தாக்குதலில் 5 கிளர்ச்சியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் கொல்லப்பட்ட 5 பேரும் ஹஸ்ம் கிளர்ச்சி குழுவை சேர்ந்தவர்கள் என்றும் எகிப்து உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் கெய்ரோவிற்கு அருகில் உள்ள எல் மார்க் எனும் இடத்தில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருந்த 5 கிளர்ச்சியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (7-8)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 60 சொகுசு வாகனங்கள் அழிப்பு

## வேடிக்கை பார்த்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி



(மணிலா)

சுமார் 40 கோடி ரூபாய் மதிப்புடைய 60 சொகுசு கார் மற்றும் மோட்டார் சைக்கிள் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டதாக கூறி, புல்டோசர் மூலம் அவற்றை நொருக்கும் பணியை பிலிப்பைன்ஸ் அரசு மேற்கொண்டது.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்டே பல்வேறு சர்ச்சைகளுக்கு பெயர் போனவர்.

போதை கடத்தலில் ஈடுபட்ட நூற்றுக் கணக்கானவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட, ஐ.நா. சபை கண்டனம் தெரிவித்தமைக்கு ஐ.நா சபை தலைவரின் மண்டையை உடைக்க வேண்டும் என கூறி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசுக் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கேகே யான் மாகாணத்தில் வைக்கப்பட்டிருந்த இந்த வாகனங்கள் மொத்தமாக அழிக்கப்பட்டன.

லம்போர்கினி, போர்ஸ்ச், மெர்சிடெஸ்பென்ஸ், ஹார்லே டேவிட்சன் ஆகிய பிரசித்தி பெற்ற கம்பனிகளின் வாகனங்கள் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டன.

பொதுவெளியில் வரிசையாக நிறுத்தப்பட்ட வாகனங்கள் மீது புல்டோசர் ஏறி நசுக்கியது. (7-8)

# திகள் தாக்குதல்!
# ிரிழப்பு

அப்போது அங்கு வந்த பயங்கரவாதிகள் சிலர் அலுவலகத்தின் மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர்.

இதனை சற்றும் எதிர்பாராத அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அலுவலகத்தை விட்டு வெளியேற முயற்சிக்கும்போது, அலுவலகத்தினுள் நுழைந்த பயங்கரவாதிகள் வெளிநாட்டினர் உட்பட பலரை துப்பாக்கி முனையில் சிறைபிடித்தனர்.

இதையடுத்து அவர்களை மீட்க அதிரடிப் படையினர் முயற்சித்தனர். இந்த முயற்சியில் இருதரப்பினருக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

இந்த மோதலில் இதுவரை 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 14 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் முதற்கட்ட தகவலில் தெரியவந்துள்ளது. (7-8)

## அணு ஆயுத ஒப்பந்த விலகல்

# தற்போதைய பிரச்சினைக்கு காரணமான அமெரிக்கா தன்னைத்தானே குற்றம்சாட்ட வேண்டும்

## ட்ரம்புக்கு ஈரான் பதிலடி

(டெஹ்ரான்)

ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து விலகியதால் ஏற்பட்டுள்ள தற்போதைய பிரச்சினைக்கு காரணமான அமெரிக்கா, தன்னைத்தானே குற்றம் சாட்டிக்கொள்ள வேண்டும் என ஈரான் தெரிவித்துள்ளது.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிக்கொண்ட அமெரிக்கா, அடுத்தடுத்து ஈரான் அரசின் மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்து வருகிறது. தனது நேசநாடுகளும் ஈரானை புறக்கணிக்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறையின் சார்பில் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

இதனால், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே சமீபகாலமாக வார்த்தைப் போர் அதிகரித்து ஒருவித மோதல் போக்கு உருவாகியுள்ளது.

இதற்கிடையே, ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரவுகானியுடன் எவ்வித முன்நிபந்தனைகளும் இல்லாமல் அமைதி பேச்சுக்கு தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ரவுகானியை சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ள ட்ரம்பின் கருத்துக்கு பதிலளிக்கும் விதமாக தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து பதிவிட்டுள்ள ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவத் ஜரிப், தற்போதைய பிரச்சினைகளுக்கு காரணமான அமெரிக்கா தன்னைத்தானே குற்றம்சாட்டிக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே 2 வருடங்களாக பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. ஆனால், ஈரானுடனான அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியதாலேயே இருநாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்தது.

எனவே, தற்போதைய பிரச்சினைக்கு காரணமான அமெரிக்கா தன்னைத் தானே குற்றம்சாட்டிக்கொள்ள வேண்டும் மிரட்டல்கள் மற்றும் பொருளாதாரத் தடைகள் வேலைக்கு ஆகாது. எனவே, மதிக்க முயற்சி செய்யுங்கள்' என முகமது ஜாவத் ஜரிப் குறிப்பிட்டுள்ளார். மேலும், அமெரிக்கா நம்பிக்கைக்குரிய நாடு அல்ல. அணு சக்தி ஒப்பந்தத்தில் இருந்து ஒருதலைப்பட்சமாக விலகிய அந்த நாட்டை எப்படி நம்ப முடியும்?

அமெரிக்க அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது ஏற்கனவே ஏற்பட்ட மோசமான அனுபவங்களின் அடிப்படையில் பார்க்கும் போது டொனால்ட் ரவுகானியை சந்திக்க விரும்புவதாக கூறியுள்ள கருத்தால் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை என ஈரான் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-8)

# இருதய நோயால் நாளொன்றுக்கு 120-150பேர் வரை உயிரிழப்பு!

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் இருதய நோயால் நாளொன்றுக்கு 120-150 பேர் வரையில் உயிரிழப்பதாக காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் இருதயநோய் பிரிவின் பொறுப்பாளர் நாமல் கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெறும் இயற்கை மரணங்களில் பெரும்பாலானவை இருதய நோய் காரணமாக ஏற்படுகின்றன. தொற்றா நோய்களினால் இலங்கையில் நாள் ஒன்றுக்கு 250 பேர் உயிரிழக்கின்றனர். இதில் அதிகளவான மரணங்கள் இருதய நோய்களினால் ஏற்படுகின்றன.

இலங்கையில் மட்டுமன்றி உலகின் எந்தவொரு நாட்டிலும் இருதய நோய்களினால் அதிகளவான மரணங்கள் ஏற்படுகின்றன. நாள் ஒன்றுக்கு இருதய நோய் தொடர்பில் 50 முதல் 60 பேருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனினும், இலங்கையில் நாள் ஒன்றுக்கு அரசாங்க மற்றும் தனியார் வைத்திய சாலைகளில் 12 சத்திரசிகிச்சைகளே மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இருதய நோய் சத்திர சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியல் நீண்டு செல்கின்றது.

அதிகளவு எண்ணெய் கொண்ட உணவு உட்கொள்ளல் போதியளவு உடற்பயிற்சி மேற்கொள்ளாமை, பரம்பரை காரணிகள், நீரிழிவு நிலைமை, மன அழுத்தம், இரத்த அழுத்தம் உள்ளிட்ட காரணிகளினால் இருதய நோய் அதிகளவில் ஏற்படுகின்றது என நாமல் கமகே மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையின் அபிவிருத்திக்கு சவுதி அரசு தொடர்ந்தும் பங்களிப்பு வழங்க வேண்டும்



(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கும் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கும் குறிப்பாக முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கும் சவுதி அரசாங்கம் கடந்த காலங்களைப் போன்று எதிர்காலத்திலும் தொடர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் அப்துல் நாஸர் எச்.அல் ஹாரதியிடம் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்துள்ளார்.

சவுதி அரேபியாவின் இலங்கைக்கான புதிய தூதுவராக அண்மையில் நியமிக்கப்பட்ட அப்துல் நாஸர் எச். அல் ஹாரதியை நேற்று முன்தினம் இராஜாங்க அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உத்தியோகபூர்வமாக தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

புதிய தூதுவர் தனது பணிகளைத் தொடர்வதற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், இலங்கையின் அபிவிருத்திக்கும் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கும் குறிப்பாக முஸ்லிம்களின் முன்னேற்றத்துக்கும் சவுதி அரசாங்கம் கடந்த காலங்களைப் போன்று எதிர்காலத்திலும் தொடர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சவுதி தூதுவர், இரண்டு அரசாங்கங்களினதும் உறவைக் கட்டியெழுப்பி எதிர் காலத்தில் இலங்கையில் மிக அதிகமான அபிவிருத் திப் பணிகளை முன்னெடுக்க சவுதி அரசாங்கத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுத் தருவதற்கு முயற்சி எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார். (இ-7)

# போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்தும் போது உயிரைப் பற்றிச் சிந்திக்கும் அவலநிலையில் மக்கள்

## அமைச்சர் நிமால் கவலை



(கொழும்பு)

இன்றைய காலகட்டத்தில் போக்குவரத்துச்சேவைகளை பயன்படுத்தும் போது மக்கள் தம்து உயிரைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய ஒரு நிலை உருவாகியுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் அதிகளவில் பேருந்து விபத்துக்கள் இடம்பெற்றதாகவும் அமைச்சின் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளைவிட தனியார் பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களே அதிகம் எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 22 ஆயிரம் தனியார் பேருந்துகளும் 5400 இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளும் தற்போது நாட்டில் இயங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் எதிர்காலத்தில் தனியார் பேருந்து சாரதிகள் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பதுளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மத்தளவில் தரையிறங்கிய உலகின் இரண்டாவது பெரிய சரக்கு விமானம்



(கொழும்பு)

உலகின் இரண்டாவது பெரிய சரக்கு விமானமான, அன்ரனோவ் ஏஎன்-124 ருஸ்லான், மத்தள விமான நிலையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் தரையிறங்கியது.

எரிபொருள் நிரப்புவதற்காகவும் விமானப் பணியாளர்கள் ஓய்வெடுப்பதற்காகவுமே இந்த விமானம் மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவிலிருந்து மஸ்கட் செல்லும் வழியிலேயே இந்த விமானம் மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியது. நேற்று அதிகாலை 1.40 மணியளவில், மஸ்கட் நோக்கி புறப்பட்டுச் செல்லத் திட்டமிட்டிருந்தது.

உலகின் மிகப் பெரிய விமானங்களில் ஒன்றான ஏஎன்-124 கனரக மற்றும் பருமனான சுமைகளை ஏற்றுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உலகின் மிகப் பெரிய சரக்கு விமானமான ஏஎன்-225 கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி மத்தள விமான நிலையத்தில் தரித்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அழைப்பிதழில் ஒரு குறிப்பு

இப்போது எதற்கெடுத்தாலும் அச்சடித்து அழைப்புக் கொடுத்துக் கூப்பிடுவது என்பது வழக்கமாகி விட்டது.

ஆனால் இந்த அழைப்பை முறைப்படி கொடுத்துக் கூப்பிடுகிறவர்கள் எவ்வளவு பேர்? வந்தால் வாருங்கள்; வராவிட்டால் போங்கள் Invitation ஐ Information போலத் தள்ளி விடுபவர்கள் உண்டு.

அண்மையில் எழுத்தாளர் சாவி ஒரு விழா நடத்தினார். எனக்கும் ஓர் அழைப்பிதழ் அனுப்பி இருந்தார். அதில் ஒரு மூலையில், நீங்கள் வந்து கலந்து கொண்டால் மகிழ்வேன்–சாவி என்று ஒரு வரி எழுதியிருந்தார். வெறும் அழைப்பாக வந்திருந்தால் முடிந்தால் போவோம் என்ற எண்ணமே மேலோங்கியிருக்கும். அவருடைய அந்த ஒரு வரி எப்படியும் போகவேண்டும் என்ற எண்ணத்தையே அதிகம் ஏற்படுத்தியது.

என் சகோதரர் ரவி தமிழ்வாணனின் திருமணத்தின்போது பல அழைப்பிதழ்களில், நேரத்தையும் தூரத்தையும் பாராமல் வந்து கலந்து கொண்டு சிறப்பியுங்கள் என்று ஒரு வரி எழுதிக் கையெழுத்திட்டிருந்தேன். செம அட்டண்டன்ஸ்! வெறுமனே அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழ் என்பது ஒரு வெற்றுக் காகிதம்தான், அதற்கு ஈர்க்கும் ஆற்றல் அவ்வளவாக கிடையாது. ஆனால் கையால் எழுதப்படும் சில வரிகள் அப்படியல்ல! அவை எவரையும் நிகழ்ச்சிக்கு இழுத்து வந்து விடும்.

அழைப்பு அனுப்புகிறவர்களுக்கு இன்னும் சில யோசனைகள். ஓர் அழைப்பிதழைப் பொத்தாம் பொதுவாக அனுப்பினால் யார் அனுப்பியிருக்கிறார்கள் என்ற விபரமே தெரிய வராமல் போய்விடலாம். எனவே அனுப்புபவரின் பெயரும் முகவரியும் அவசியம். பல அழைப்பிதழ்களில் விழா நடக்கும் இடங்களின் முகவரிகள் மட்டுமே இருக்கின்றன. இது தவறு. விழா நடத்துபவரின் இல்ல, அலுவலக முகவரிகள், தொலைபேசி எண்களுடன் இருந்தால் புதிய மாற்றங்கள் அனைவருக்கும் தெரிய வரும். அதுமட்டுமல்ல நட்பை–உறவைப் புதுப்பித்துக்கொள்ளவும் ஏதுவாகும். தாமதமாகவோ, வெகு முன்னதாகவோ அனுப்புகிறவர்களுக்கும் சௌகரியம், மண்டபங்களில் வாழ்த்தை ஒழுங்காகவா சேர்ப்பிக்கின்றார்கள்?

விழா நடக்கும் இடத்தை விளக்கும் வரைபடம், வழிகாட்டும் குறிப்புகள் அவசியம். தேடிவருபவர்கள் அலைந்து தவித்து நாக்குத் தள்ளிப்போய் சே! என்னையா விழா நடத்துகிறார் இவர்! எங்கே நடக்குதுன்னே தெரியலையே! என்று திட்டுவதற்கு இடம் தந்துவிடக் கூடாது. தேடி வருபவர்களுக்குப் பயனுள்ள குறிப்புகள் இருந்தால், விழாவை மட்டுமல்ல, விழா நடத்துபவர்களையும் சேர்த்தே வாழ்த்துவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

### யாழ். மாநகர சபையில்

# வட்டார அபிவிருத்தி தொடர்பில் 4 மணித்தியாலங்கள் விவாதம்

(யாழ்ப்பாணம்)

வட்டாரத்தினுள் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். மாநகரசபையின் நேற்று முன்தின அமர்வில் 4 மணித்தியாலங்களுக்கு மேல் உறுப்பினர்களிடையே வெவ்வேறு கருத்து முரண்பாடுகள், தர்க்கங்கள் இடம் பெற்றுள்ளன. யாழ்.மாநகர சபையின் 6 ஆவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆரம்பத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களுக்கும் வட்டாரங்களில் இடம்பெறும் அபிவிருத்திகள் தொடர்பாக கருத்து மோதல் இடம்பெற்றது. அப்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் வி.மணிவண்ணன், யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி முதல்வர் எமது கட்சியின் மாநகர சபை உறுப்பினர் ஒருவரை அச்சுறுத்தியுள்ளார். இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றோம். அவரிடம் ஆயுதங்கள் இருக்கின்றனவா? என்ற அச்சம் எமக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆயினும் எமது உறுப்பினருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம். மாநகர சபையில் ஆளுங்கட்சியாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சபையில் எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளையும் எம்மை முடக்குகின்ற செயற்பாடுகளையுமே தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். மாநகர சபையில் எமது கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக இருக்கின்ற நான் சபையின் மராமத்துக் குழுவின் தலைவராகவும் இருக்கின்றேன். அத்தோடு சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அவர்கள் தங்கள் வட்டாரத்திற்கான அபி விருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றமை போன்று தேசியப் பட்டியல் உறுப்பின ராக இருக்கின்ற எனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் நானும் பல இடங்களில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்து வருகினறேன். அவ்வாறு நான் அபிவிருத்திகளை முன்னெடுக்கும் போது அதனைக் குழப்பும் செயற்பாடுகளை கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மேற் கொள்கின்றனர்.

ஏனெனில் அவர்கள் தங்கள் வட்டாரங்களில் தாங்கள் தான் எதுவானாலும் செய்ய வேண்டும் அங்கு வேறு யாரும் எந்த அபிவிருத்தியையும் செய்யக் கூடாதென்று கூறுகின்றனர்.

மக்களுக்கான அபிவிருத்திகளை முன்னின்று செய்வதால் என்னை முடக்குவதற்கும் என்னை அகற்றுவதற்குமான சதி வேலைகளை கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு மக்களுக்காக நாம் செயற்படுகின்ற போது என்னை அகற்றினால் தாம் விரும்பியவாறு செயற்படலாமெனவும் கூட்டமைப்பினர் கருதுகின்றனர். குறிப்பாக தற்போது நான் போட்டியிட்ட வட்டாரத்திலே நான் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவதை விரும்பாத சுயநலவாதி உறுப்பினர் ஒருவர் அதனை தடுத்திருக்கின்றார்.

அங்கு எது செய்யவும் எனக்கு சுதந்திரம், உரிமை உண்டு. அதனை யாரும் கேள்விக்குட்படுத்த முடியாது எனத் தெரிவித்தார். பின்னர் நடைபெற்ற விவாதம் ஒன்றில் பிரதி முதல்வர் எதிர்க்கட்சி உறுப்பினர் மணிவண்ணன் விகிதாசார உறுப்பினர் எனக் கருத்து ஒன்றை தெரிவித்தார்.

அதற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து அவரின் கருத்தை வாபஸ்பெற வேண்டும் எனவும் விகிதாசார உறுப்பினர் என ஒருவரை குறிப்பிட்டு கூறும் போது இந்தச் சபையிலுள்ள 18 விகிதாசார உறுப்பினர்களையும் அது குறிக்கும் எனவும் சபை உறுப்பினர்களை கௌரவம் இன்றி பேச முடியாது எனவும் எதிர்ப்புத்தெரிவித்தனர். அதற்கு முதல்வர் தான் அந்தக் கருத்தை அறிக்கையில் இருந்து நீக்கி விடுகிறேன் எனத் தெரிவித்தார். அதற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் உடன்படவில்லை. பிரதி முதல்வர் சபையில் எழுந்து நான் அந்தக் கருத்தை வாபஸ் பெறுகிறேன் எனக் கூற வேண்டும் எனத் தெரிவித்தனர். அதனை அடுத்து முதல்வர். பிரதி முதல்வரிடம் வாபஸ் பெறுகிறீர்களா? எனக்கேட்டார். அதற்கு பிரதி முதல்வர் தன் கருத்தை வாபஸ் பெற மாட்டேன் என ஆணித்தரமாகக் கூறி அமர்ந்தார். அதனைத் தொடர்ந்து சபையில் பெரும் கூச்சல். குழப்பம் ஏற்பட்டது.

பிரதி முதல்வரின் கருத்து இந்தச் சபையில் விகிதாசார முறைமையில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களையும் அவமதிக்கும் வகையிலுள்ளது என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். அதற்கு முதல்வர் தன்னால் என்ன செய்ய முடியும். பிரதி முதல்வர் தன் கருத்தை வாபஸ் பெற முடியாது எனக் கூறுகின்றார். கருத்தை வாபஸ் பெறு என கட்டி வைச்சு அடிக்கவா முடியும். அதனை அடுத்து எழுந்த ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர் செல்வவடிவேல், இந்தச் சபையிலுள்ள அனைவரும் உறுப்பினர்களே. இங்கே விகிதாசார முறைமையில் தெரிவு செய்யப்பட்டவர்களை அவமதிக்கும் வகையில் சக உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார். அத்துடன் மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதி முதல்வரின் கருத்துக்கு எதிர்ப்புக்களைத் தெரிவித்தனர். கடுமையான எதிர்ப்பு சபையில் எழுந்ததால் இறுதியில் பிரதி முதல்வர் எழுந்து தனது கருத்தை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தார்.

அதேவேளை ஆளும் கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் விகிதாசார முறைமையில் தெரிவான உறுப்பினர்கள் எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்காது மௌனமாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)


## பற்றைக் காணிக்குள்ளிருந்து துவிச்சக்கரவண்டிகள் மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் பற்றைக்குள் அநாதரவாகக் கிடந்த இரண்டு துவிச்சக்கர வண்டிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவில் அருகிலுள்ள பற்றைக்காணிக்குள் ஆண் ஒருவருடையதுமான பெண் ஒருவருடையதுமான இரு துவிச்சக்கர வண்டிகள் இரண்டு நாட்களாக அநாதரவான நிலையில் காணப்பட்டன. இது தொடர்பாக அப் பகுதி இளைஞர்கள் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சாவகச்சேரி பொலிஸார் அப் பகுதியில் தேடுதல் மேற் கொண்டதோடு இரண்டு துவிச்சக்கர வண்டிகளை யும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர். (இ-29-89)

## இலங்கையில் அதிசய ஆந்தை



(கொழும்பு)

இலங்கையில்புதியு வகையிலான ஆந்தை இனம் ஒன்று ஈர மண்டல வலயத்திற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வனவிலங்கு புகைப்பட கலைஞர் புஷ்பலால்என்பவரின் கமரா வில் இந்த ஆந்தையின் புகைப் படங்கள் சிக்கியுள்ளன.

ஆந்தையின் முதுகு பக்கத்தில் கடுமையான ஊதா நிறம் காணப்படுவதாகவும் நெஞ்சு மற்றும் அடிவயிற்றுப் பகுதியில் பழுப்பு நிறம் மற்றும் ஊதா நிறங்கள் காணப்படுகின்றன.

இந்த ஆந்தைகளிடம் கேட்கும் திறன் சற்றுக்குறைவாகவுள்ள நிலையில் அது ஏனைய ஆந்தைகளைப் போன்று தலையை தூக்கிய நிலையிலேயே காணப் படாதென புகைப்படக் கலைஞர் புஷ்பலால் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 9 வகையான ஆந்தைகள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் வித்தியாசமான நிறங்கள் மற்றும் தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆந்தை Otusbakkamoenalattia என்ற ஆந்தை இனத்தின் அடையாளங்களைக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான ஆந்தை இதற்கு முன்னர் இலங்கையில் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் இது தொடர்பான ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ராஜித ஜனாதிபதியாக மைத்திரி பிரார்த்தனை



(கொழும்பு)

சுகாதார அமைச்சர்களாக இருந்தவர்கள் நாட்டின் ஜனாதிபதியாக வந்த வரலாறு இருப்பதனால், அமைச்சர் ராஜித சேனாரட்னவும் அந்த நிலைக்கு எதிர்காலத்தில் வருவார் என்ற சுப சோபனத்தை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உலக சுகாதார நிறுவனத்தின் உப தலைவர் பதவியைப் பெற்ற அமைச்சர் ராஜித சேனாரட்னவைப் பாராட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் முதலாவது சுகாதார அமைச்சராக இருந்த பண்டாரநாயக்க இருந்தப் பதவியிலிருந்து வெளியே வந்து நாட்டின் தலைவராக பதவியேற்றார். தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சுகாதார அமைச்சராக இருந்துவிட்டு வெளியேறி நாட்டின் தலைவராக பதவியேற்றார் என இந்த நிகழ்வில் உரையாற்றும் போது டாக்டர் காலோ பொன்சேக கூறியது முக்கிய ஒன்று என ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இந்த நேரத்தில் நானும் அதனையே ஞாபகப்படுத்துகின்றேன். இருந்த இடத்தில் இருந்துகொண்டோ அல்லது வெளியேறியோ அமைச்சர் ராஜித சேனாரட்னவும் நாட்டின் தலைவராக வர வேண்டும் என பிரார்த்திக்கின்றேன் என ஜனாதிபதி மைத்திரி மேலும் தெரிவித்தார். (இ-7)



வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் விஜயராஜ் வாழ்வாதார உதவி கோரிய நான்கு குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கினார்.

## 'தவம்' கவிதைப் புத்தகம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலாநிதி கவிஞர் காரை செ.சுந்தரம்பிள்ளையின் "தவம்" கவிதை புத்தக வெளியீடும் அவரது எண்பதாவது அகவை நினைவேந்தலும் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் யாழ்.பஸ்தியன் சந்திக்கு அண்மையில் உள்ள பாதுகாவலன் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இதில் வரவேற்புரையை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் வழங்கவுள்ளார்.

ஆசியுரையை புனிதவளன் கத்தோலிக்க அச்சகப் பணிப்பாளர் அருட்திரு எயின்ஸ்லி றொசான் வழங்குவார்.

வாழ்த்துரையை யாழ். மாநகர ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலன் வழங்க சிறப்புரையை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோண்சன் ராஜ்குமார் வழங்குவார். புத்தகத்தின் முதற் பிரதியை யாழ்.பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பெற்றுக் கொள்வார். (இ-7)

# மிஹின் லங்கா விமான சேவை மோசடி ஆணைக்குழுவின் காலம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை, மிஹின் லங்கா விமான சேவை நிறுவனங்களின் மோசடி குறித்து ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா ஆகிய நிறுவனங்களில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி முதல் 2018 ஜனவரி 31 ஆம் திகதி வரை இடம்பெற்றதாகக் கருதப்படும் மோசடிகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த பெப்ரவரி மாதம் நியமிக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# புலிகளால் மலேசியாவுக்கும் அச்சுறுத்தல் முன்னாள் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை தோற்கடித்திருக்கலாம். ஆனால் அவர்களுடைய கருத்தியல் இன்னும் பல நாடுகளில் காணப்படுகின்றது என மலேசியாவின் முன்னாள் பொலிஸ்மா அதிபர் டன் ஸ்ரீ முசா ஹசன் தெரிவித்துள்ளார்.

கோலாலம்பூர் தொலைக் காட்சி சேவையொன்றிற்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்விடயத்தைக் கூறியுள்ளார்.

புலிகளின் ஆதரவாளர்கள் உலகம் முழுவதும் காணப்படுகின்றனர் என்றும், அவர்களால் மலேசியாவிற்கும் அச்சுறுத்தல் உண்டு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த அச்சுறுத்தலை சாதாரணமாக கருதக்கூடாதென்றும் அவர் கூறியுள்ளார்.

புலிகள் இயக்கமானது மலேசியாவிலும் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே காணப்படுகின்றது. இந்நிலையில், மலேசியாவின் பெனாங் மாநில பிரதி சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி.பி.ராமசாமி, புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாக அண்மையில் விமர்சிக்கப்பட்டார். எனினும், அவர் அதனை மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரான்ஸ் தூதுவர் ஹக்கீம் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் மரீன் சுச் மற்றும் நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத் திட்டங்கள் தொடர்பாக விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கடந்த மாதம் நீர் கொழும்பில் பிரான்ஸ் நாட்டின் நிதி உதவியுடன் பாரிய கழிவு நீர் முகாமைத்துவத் திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டம் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது. (இ-7)

# "அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்" முதலமைச்சரிடம் பதில் தூதுவர் உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று, இலங்கைக்கான அமெரிக்கப் பதில் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் உறுதியளித்துள்ளார்.



வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், பதில் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அமெரிக்கப் பதில் தூதுவர் தனது டுவிட்டரில்,

"ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015, 2017 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நடைமுறைப் படுத்துவதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என உறுதியளித்துள்ளேன் என்று" குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# பிரதமராகும் தகுதி என்னிடம் உண்டு

## குமார வெல்கம கூறுகிறார்



(கொழும்பு)

பிரதமர் பதவியைப் பொறுப்பேற்க தான் தயார் எனவும் அதற்கான தகுதியும் திறமையும் தன்னிடம் உள்ளதாகவும் கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வருகை தந்த போது கூட்டு எதிர்க்கட்சி சார்பாக பிரதமர் பதவியை ஏற்பீர்களா? என ஊடக வியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் குமார வெல்கம இதனைத் தெரிவித்தார்.

தாங்கள் தகுதி என்று கூறிய போதிலும் இதற்கான வாய்ப்பு தங்களுக்கு கிடைக்கப்பெறாது போகும் நிலைமை உள்ளதாக ஊடகவியலாளர் ஒருவர் கூறியதற்கு, மகிந்த ராஜபக்ஷ அதனை நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கின்றேன். என்னை யாரும் ஏமாற்ற முடியாது. நான் ராஜபக்ஷ குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஆவேன் எனவும் குமார வெல்கம எம்.பி. தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 3 விதி எண் 2

குரு மாற்றம் சூரிய ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். பல துறைகளிலும் மிகச் சிறந்த அனுபவம் இருக்கும். முதிர்ந்த அனுபவசாலிகள். இயற்கையிலேயே நேர்மையான குணம் கொண்டவர்கள். தனது மனதிற்குப் பிடிக்காத காரியங்களில் ஈடுபட மாட்டார்கள். குருபக்தியும் பெரியோர்கள் விசுவாசமும் இருக்கும். மனசாட்சிப் படியே நடந்து கொள்வார்கள். கண், காது, உதடுகள் அழகாக இருக்கும். இரண்டாகப் பிளவுபட்ட தாடை இருக்கும். ஒளிவு மறைவு இல்லாமல் உண்மையைப் பேசுவார்கள். எங்கு சென்றாலும் பெயரும் புகழும் கிடைக்கும். இளமையிலேயே வழுக்கை விழுந்துவிடும். தெய்வ நம்பிக்கை அதிகம் இருக்கும். மோகன சக்தியுண்டு.

குழந்தைகள் மீது அதிகமான பாசமிருக்கும். அரசியல் ஞானிகள். பிரயாணத்தில் பிரியமுடையவர்கள். இரவு-பகல் பார்க்காமல் எப்போதும் உழைப்பார்கள். மற்றவருக்கு ஆலோசனைகள் கூறுவதில் வல்லவர்கள். பகையை விட பாசத்திற்கே அதிக முக்கியத்துவம் அளிப்பார்கள். கற்பனையை விற்பனையாக்கும் கலாவிற்பன்னர்கள். பூர்வீகத்தாலும் அரசியலாலும் அற நிலையத்தாலும் புகழ் பெறுவார்கள். உண்மை, உழைப்பு, உயர்வு …அனைத்து ஜீவராசிகளுக்கும் ஆதாரம் இம் மூன்றும் தான் என்று பறைசாற்றுவார்கள். இவையே இவர்களின் தாரக மந்திரமாகும். தன்னம்பிக்கை மிக்கவர்கள். சுறுசுறுப்பு, காலந்தவறாமை, நீதி, நேர்மை, நம்பிக்கை இவற்றுக்குப் பாத்திரமாக விளங்குவார்கள்.

அன்பு, பொறுமை, பக்தி, நாணயம் மிக்கவர்கள். உலகில் பெருந்தலைவர்கள் என்று பெயரெடுப்பார்கள். அரசியலில் பிரகாசிப்பார்கள். வாழ்நாளில் பிற்பகுதியில் வரலாறு போற்றும் மனிதராவார்கள். பிறருக்கு உதவும் உயர்ந்த பண்பு இருக்கும். சென்ற இடமெல்லாம் சிறப்புகள் இருக்கும். பெரியவர்கள் சொல்லை மதிப்பார்கள். மானத்தைக் காப்பார்கள். உண்மையில் கவரிமான் போன்ற குணமுடையவர்கள். ஆலோசனை வழங்குவதில் கைதேர்ந்தவர்கள். பிறரைத் தட்டிக் கொடுத்தும் கண்டித்தும் வேலை வாங்குவதில் கெட்டிக்காரர்கள். பொன்னான இருதயம் படைத்தவர்கள். பிறருடைய துன்பத்தைப் போக்குவார்கள். நேர்மைக்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள். ஆன்மீகம், மதம் போன்றவற்றின் மீது மிகுந்த ஆர்வமிருக்கும்.

மற்ற மதத்தை மதிக்கும் நல்ல பண்புகள் இருக்கும். பழைய கொள்கைகளைக் கடைப்பிடிப்பார்கள். புதிய நாகரிக மாற்றத்திற்கு மனம் இடந்தராது. நுண்ணறிவு மிக்கவர்கள். தன்னுடைய மேலதிகாரிகள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள். அடிமையாக எண்ணி விட்டால் எதிர்க்கவும் தயங்க மாட்டார்கள். பிரச்சி




னைகளை அலசும்போது ஒருசாராருக்குச் சாதகமாகப் பேசாமல் நடுநிலையுடன் பேசி சரியான தீர்ப்பினை வழங்குவார்கள். சுதந்திர உணர்ச்சி மிக்கவர்கள். பிறக்குக் கட்டுப்பட்டு வாழ மாட்டார்கள். எப்போதும் மகிழ்ச்சியாகவே வாழ ஆசைப்படுவார்கள். மற்றவர்களின் விளக்கங்களுக்கு உடனுக்குடன் பதிலளித்து மெய் சிலிர்க்க வைப்பார்கள். சாதிக்கும் ஆர்வமுடையவர்கள். பண விடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வார்கள். உற்சாகத்துடன் செய் தொழிலில் ஈடுபடுவார்கள். அதிக தன்னம்பிக்கையும் திறமையும் உடையவர்கள். சட்டம், மருத்துவம், அறிவியல், நீதி போன்ற துறைகளில் பணியாற்றுவார்கள். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களைச் சுற்றிப் பார்ப்பார்கள். இவர்கள் நண்பர்களையும், உறவினர்களையும் அழைக்கின்ற விதமே வித்தியாசமானதாக இருக்கும். பிறருக்கு உபதேசம் செய்வார்கள். நல்ல உடல் ஆரோக்கியம் இருக்கும்.

ஆடம்பர வாழ்க்கையை விரும்ப மாட்டார்கள். நட்பை நேசிப்பார்கள். உயர் பதவி வகிப்பவர்களின் நட்பு கிடைக்கும். மிக நல்ல வாழ்க்கைத் துணை அமையும். பிறருடைய யோசனையை ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். தான தர்மங்களை மனம் விரும்பிச் செய்வார்கள். லேசாக முடி சுருண்டிருக்கும். புருவம் வளைந்திருக்கும். கண்களில் கருணை ஒளியிருக்கும். உண்மையான அன்பு கொண்ட இவர்கள் இதயத்தால் பழகுவார்கள். தன்னை நாடி வருபவர்கள் துன்பம் துடைக்க தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வார்கள். பிறரை நன்கு உபசரிப்பார்கள். போலியாகப் பேசத் தெரியாதவர்கள். பலரைக் கட்டிக் காக்கும் நிர்வாகத் திறமையிருக்கும். நேர்மையான அதிகாரிகள் இந்த எண்காரர்களாக இருப்பார்கள். பிறரை மதித்துக் கண்ணியமாக வாழ்வார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
3,12,21,30,1,10,19,28,9,18,27

துரதிர்ஷ்ட திகதிகள்
6,15,24,4,13,22,31,8,17,26

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஒரேஞ்சு, கத்தரிப்பூ நிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை,இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கனகபுஷ்பராகம், மாணிக்கம், எமிதிஸ்ட், சூரிய காந்தக் கல், ஒபல்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

கடந்தகாலச் சம்பவங்களைப் பற்றிய ஆய்வென்பது, அக் காலத்தில் எதைச் சொன்னார்கள், எதை எழுதினார்கள், பின்னர் அவற்றின் காரணமாக என்ன போக்கு உருவாகியது அல்லது என்ன நிகழ்ந்தது என்பவற்றை உள்ளடக்கும். இத்தகைய சம்பவங்களை மாணவர்கள் எவ்வளவுக்கு நெருங்கிக் காண்கின்றனரோ, அவ்வளவுக்கு அவர்களுக்கு அந்த சம்பவங்களை நேரடியாக அவதானிக்க முடிகின்றது. அந்தச் சம்பவங்களுக்குச் சாட்சி கள் என்ற வகையில் எவ்வளவுக்கு அவற்றுடன் அவர்களுக்கு நெருக்கமுண்டோ, அவ்வளவுக்கு தமது கற்பனா விவேகத்தைப் பயன்படுத்தி இச் சம்பவங்களைப் புரிந்து கொள்ளவும் அவற்றின் மெய்மையை உருவகித்து உணரவும் இயலும்.

இச் சந்தர்ப்பத்தில் 'மூலாதாரம்' (Primary Sources) என்ற சொல்லை வரைவு செய்வது முக்கியமாகும். 'அசல்' (Original) 'ஆதாரம்' (Source), 'ஆரம்பம்"(Primary)' எல்லாமே 'முதல் முதலான்' (First-hand) என்ற அர்த்தம் கொண்டவையாகும்.

இவற்றுள் 'ஆதாரம்' என்ற சொல்லே மிகவும் அதிக மாகப் பயன்படுத்தப்படுகின்றது. எங்கிருந்து நாம் தகவல்களைப் பெறுகின்றோமோ, அவற்றுக்கெல்லாம் ஆதாரம் என்ற சொல் பொருந்தும். ஆரம்பம் அல்லது ஆதி மூலம் என்பவற்றைக் குறிக்கும் போது ஆய்வுகளில் இச் சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது.

'நதிமூலம்' என்ற சொல்லை இது ஒத்திருந்த போதும், முழுக்க முழுக்க 'உருவாகும் இடம்' வரைவிலக்கணத்தில் இச் சொல் கட்டுப்படாது. 'அசல்' என்ற சொல் வேறு பல விடயங்களையும் குறிக்கும். ஆய்வுத் துறையிலும் அவ்வாறே அதற்குப் பல அர்த்தங்கள் உண்டு. இவ்விரு சொற்களுமே தனித்து நின்று பயன்படும் வகையில் போதுமான திடமான கருத்துருவை ஏற்படுத்துவதில்லை.

'ஆரம்ப' என்ற அடைமொழி, 'இரண்டாம் நிலை' என்ற சொல்லிலிருந்து வேறுபடுத்தி ஒன்றைப் புலப்படுத்துகின்றது. ஆய்வு செய்யப்படும் நபரிடமிருந்து அல்லது நிகழ்வுகளிலிருந்து நேரடியாகப் பெறப்பட்டது என்ற கருத்திலேயே, 'ஆரம்ப' என்ற சொல் ஆய்வுகளில் பயன்படுத்தப்படுகின்றது.

மூலாதாரங்கள், ஓர் அர்த்தத்தில், ஓர் அமைப்பினால் வேண்டுமென்றே பாதுகாக்கப்பட்டவையாகவும் இருக்கலாம். இந்த அமைப்பானது, அரசாங்கம், வியாபாரம், சமயம், நிறுவனம் என்பவற்றின் அமைப்பாகவோ, அல்லது தனிப்பட்டதொரு குடும்பமாகவோ இருக்கலாம்.

தமது எதிர்காலத் தேவைகளுக்கான செயற்பாடுகளின் சான்றாக அல்லது தமது கதையை அழியாது நீடிக்கச் செய்யும் முயற்சியாக இது உள்ளது. இத்தகைய மூலாதாரங்கள் ஈற்றில் ஒரு முகவரிடம் சென்றடையக்கூடும். இந்த முகவரின் கடும்பணி இந்த மூலாதாரங்களைப் பேணிப் பாதுகாப்பதாகும். இவை பல்வேறு மூலங்களிலிருந்து கிடைக்கலாம். (இவற்றில் சில, வரலாற்று இயல்புடைய பொருட்களை உடைமையாக்கும் ஆர்வங்கொண்டவர்களினால் சேகரிக்கப்பட்டவை.) யாராவது, அவர்கள் விரும்பும் பட்சத்தில் இவற்றைப் பயன்படுத்துவதற்காக இருப்பவை இவையாகும்.

பழைய கையெழுத்துப் பிரதிகள் குறித்து ஒரு பிரமை உண்டு. இவற்றுக்கு ஒரு தனிப்பட்ட தன்மை என்பன இருப்பதனால், நாம் அவற்றை ஆக்கியோனுடன் நெருங்க முடிவதுபோற் தோன்றுகின்றது. இந்த உண்மையுணர்வு, மேலோட்டமாக எழும் அபிப்பிராயத்தை விடக் கனமானது. இந்த உணர்வு தான், வரலாற்றாசிரியர் அசல் ஆதாரங்களில் கொள்கின்ற நம்பிக்கைக்கு அடிப்படையாகும்.

அத்துடன், கடந்த காலத்தையிட்ட தீவிரமான ஆய்வின் பெரும் பகுதிக்கு இதுவே அத்திபாரமும் ஆகும். முன்னொரு சகாப்தத்தின் பங்காளர் தமது செயல்முறைகளை, தமது எண்ணங்களை, தமது செயல்களை, தமது எதிர் வினைகளைப் பதிவு செய்துள்ள இந்த ஆவணங்களை விட, வேறெந்த வகைச் சான்றுமே அவற்றை அவ்வளவு விளக்கமாகச் சொல்வதில்லை. மூலாதாரங்களைப் பலன்தரும் வகையில் பயன்படுத்த வேண்டுமெனில், சம்பந்தப்பட்ட ஆய்வாளர்கள், அவர் தொழில்சார்ந்த வல்லுநராக இருந்தாலும் சரி, சாதாரண வாசகனாக இருந்தாலும் சரி, அந்த மூலாதாரங்களின் இயல்பு, பின்னணி அவற்றின் பௌதீக குணாதிசயங்கள் என்பனவற்றுடன், அவை எழுப்பும் பிரச்சினைகளையும் அறிந்திருத்தல் அவசியம்.

மூலாதாரங்களில் தமது நோக்கத்தை நிறைவு செய்யக்கூடிய அம்சங்களைக் கண்டு, அவற்றினுள் உரியதை, விவேகத்துடன் தெரிவு செய்யும் திறன் அவர்களுக்கு அவசியம்.

இலங்கைத் தமிழரின் தற்போதைய நிலைமையைக் கருத்துக்கு எடுக்கையில் உலகெங்கும் உள்ள இவர்கள் சம்பந்தமான மூலாதாரங்களை ஆராய்ச்சி செய்வது முக்கியமானது என்பது இப்போது தெளிவாகின்றது.

இந்தக் கடுமையான பணி இலகுவான ஒன்றல்லதான். இருந்தபோதும் இது இலங்கைத் தமிழர் பற்றிய ஆய்வுகளுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்ததாகவும், முக்கியமானதாகவும் உள்ளது.

1954 இல் வெளிவந்த 'Tamil Culture' என்னும் ஏட்டில், சேவியர் தனிநாயகம் அடிகளார் எழுதியிருக்கும் கட்டுரையைப்படிப்பது, மேற்குலகில் உள்ள பொருத்தமான மூலாதாரங்களின் தொகுப்புகள் பற்றிய தகவல்களை அறிவதற்கு மிக உதவியாக இருக்கும் என இந்திரபாலா அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

சிலகாலம் இக் கட்டுரையைத் தேடியலைந்து, ஈற்றில் அதனை ஜேர்மனியிலுள்ள ஹெய்டில்பேர்க் பல்கலைக்கழக நூலகத்தில் கண்டுபிடிக்க முடிந்தது. ஆர்வத்தை மிகவும் தூண்டும் இந்தக் கட்டுரை இரண்டே பக்கங்கள் கொண்டதாயினும், ஒரு புத்தூக்கத்தை நூலாசிரியருள் ஏற்படுத்தியது. ('Xavier thaninayagam: Tamil Munuscrips in euro pean Libraries, in Tamil Cultuer: vol 111, Nos. 3-4', October 1954)

இந்த ஏட்டின் பத்திராதிபர், அடிகளாரின் கட்டுரையின் சாராம்சத்தைப் பின்வருமாறு தன் முன்னுரையில் கூறுகின்றார்.

இந்த ஆசிரியர், ஐரோப்பாவிலுள்ள அதிமுக்கியமான நூலகங்களில் உள்ள தமிழ் ஆதாரங்கள் பற்றிய ஆரம்பக் கணிப்பொன்றை மேற்கொள்ளும் நோக்குடன் அவற்றுக்குச் சென்றிருந்தார்.

ஒரு குறுகிய காலமே அவர் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த போதும், எடுத்த முயற்சிக்கு மேலாகவே அவருக்கு பலன் கிடைத்தது. எனவே அவர் தனது கண்டுபிடிப்புக்கள், ஐரோப்பாவையிட்டு எழுதப்புகும் எதிர்காலத் தமிழ் அறிஞர்களைத் தமது ஆய்வை விஸ்தரிக்கத் தூண்டும்.'

ஐரோப்பிய நூலகங்களைத் தேடிச் செல்லத் தயாராக இருக்கும் ஊக்கம் மிகுந்த தமிழ் அறிஞருக்கு அங்கே, மேலும் முக்கியமான, ஆர்வத்தைத் தூண்டக்கூடிய கண்டுபிடிப்புக்கள் காத்திருக்கின்றன.

மேற்காணும் இந்த சில வசனங்களே இந்த நூலாசிரியனைத் தூண்டி யது மட்டுமல்லாமல், கடந்த இரண்டு வருட காலமாகத் தொடர்ந்த இந்த ஆய்வுப் பணியில் இடையறாத புத்தூக்கத்தையும் அளித்து வந்தது.

(தொடரும்)



தேசிய ஆவணக் காப்பகம்- நெதர்லாந்து

> தமது எதிர்காலத் தேவைகளுக்கான செயற்பாடுகளின் சான்றாக அல்லது தமது கதையை அழியாது நீடிக்கச் செய்யும் முயற்சியாக இது உள்ளது. இத்தகைய மூலாதாரங்கள் ஈற்றில் ஒரு முகவரிடம் சென்றடையக்கூடும். இந்த முகவரின் கடும்பணி இந்த மூலாதாரங்களைப் பேணிப் பாதுகாப்பதாகும். இவை பல்வேறு மூலங்களிலிருந்து கிடைக்கலாம்.


தேசிய ஆவணக் காப்பகம்- லண்டன்

# சட்டத்தை அமுல்படுத்துவதில் பிரதமர் ரணில் தலையீடு-சரத்

(கொழும்பு)


சட்டத்தை அமுல்படுத்துவதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலையீடும், அச்சுறுத்தல்களும் காணப்படுவதாக பேராசிரியர் சரத் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

புரவெசி அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், பிரதமரின் தலையீடு காரணமாக கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பான விசாரணைகள் தாமதிக்கப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் சரத் விஜேசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் நீதித்துறையின் சுதந்திரம் வலுப்படுத்தப்பட்டுள்ளது என அரச தரப்பினர் மார் தட்டிக் கொள்ளும் நிலையில், பிரதமருக்கு எதிராக இவ்வாறானதொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-8)

# பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த குடிநீர்க்குழாய்கள் அடித்து உடைப்பு



(கரணவாய்)

பாடசாலை ஒன்றிற்குள் நுழைந்த விசமிகள் சிலர் மாணவர்களின் குடிநீர்த் தேவைக்காக பொருத்தப்பட்டிருந்த குழாய்களை உடைத்து சேதப்படுத்தியதுடன் கட்டடங்களுக்குள் கழிவு நீரை ஊற்றியுள்ளனர்.

வடமராட்சி மாலுசந்திக்கு அண்மையில் உள்ள அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.


கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

பாடசாலை பூட்டப்பட்டிருந்த நிலையில் உள் நுழைந்த விசமிகள் மாணவர்களின் குடிநீர் தேவைக்காக பொருத்தப்பட்டிருந்த தண்ணீர்க்குழாய்கள் என்பவற்றை உடைத்ததுடன் பாடசாலை கட்டடங்களிற்குள்ளும் கழிவுநீரை ஊற்றிவிட்டு சென்றுள்ளனர்.

பாடசாலையில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் தீவிரமான விசாரணையின்ன மேற்கொண்டுள்ளனர். (இ-60)

# ஈரான் - இலங்கை இடையிலான உறவை வலுப்படுத்த தடையில்லை

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரிடம் ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஈரானிய வெளிவிவகார அமைச்சர் மொகமட் ஜவாட் ஷரீப் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, பிராந்திய மற்றும் அனைத்துலக விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாக, ஈரானிய செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சந்திப்பின்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் பழைமை வாய்ந்த உறவுகள் குறித்து குறிப்பிட்ட ஜனாதிபதி கடந்த மே மாதம் ஈரானுக்குத் தான் மேற்கொண்ட பயணம் ஆக்கபூர்வமான ஒன்றாக இருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல்வேறு துறைகளில்- குறிப்பாக, சக்தி உள்ளிட்ட துறைகளில் தெஹ்ரான்- கொழும்பு இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவாக்குவது தொடர்பாகவும், ஜனாதிபதி பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அனைத்துலக அமைப்புகளுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி மைத்திரி இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை விரிவாக்குவதில் எந்த தடையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள விருப்பம் வெளியிட்ட ஈரானிய வெளிவிவகார அமைச்சர், சக்தி, விவசாயம், தொழில்நுட்ப பொறியியல் சேவைகள் போன்ற துறைகளில் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இணங்கியுள்ளார்.

நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரியவையும் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

ஈரானிய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை பயணம் தொடர்பாக, அந்த நாட்டு ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டுள்ள போதிலும், ஈரானிய வெளிவிவகார அமைச்சரின் பயணம் மற்றும் ஜனாதிபதியுடனான சந்திப்புகள் தொடர்பான செய்திகளை இலங்கை அரசாங்கம் இருட்டடிப்பு செய்துள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பாக ஜனாதிபதி செயலகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் சார்பில் எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1476

## சாந்து

காரணத்தோடு யாரையும் நேசிக்காதீர்கள்



காரணமின்றி யாரையும் வெறுக்காதீர்கள்.
இரண்டுமே நம்மை காயப்படுத்தும்

## சுமன்

கோயில் ஒரு விசித்திரமான இடம்.
வெளியே ஏழையும் உள்ளே பணக்காரனும்
பிச்சை எடுக்கிறார்கள்



## மணி

அழகு நிலையத்தில் பெண்
தன் உண்மை முகத்தை மறைக்கிறாள்



மதுக்கடையில் ஆண்
தன் உண்மை முகத்தை வெளிக்காட்டுகிறான்

## தாஸ்

கொலையை நிரூபிக்க ஒரு சாட்சி போதுமாம்...



பதிவுத் திருமணத்திற்கு தான் இரண்டு சாட்சிகள் வேணுமாம். கொலை செய்வதை விட ஆபத்தானது போல கல்யாணம் பண்றது

## விது

நாம் காதலி இல்லாட்டியும்கூட இருந்திடலாம்...
ஆனால் வேலை இல்லாம வெட்டியா
இருக்கவே கூடாது



ஊரில ஒரு பயலும் மதிக்கமாட்டானுங்க...

## தீபன்

வெளிநாட்டுப் பணம் வருது என்று
சொல்பவர்களுக்குத் தெரியுமா?
வெளிநாட்டு பணத்தின் கஷ்டம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## விரலால் முறிந்த மணவாழ்வு

(ஹற்றன்)

திருமண நிகழ்வின் போது மணமகளின் அதிருப்தியால் மணமகனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி தொடர்பில் தகவல் வெளியாகி உள்ளது.

நுவரெலியாவில் தோட்ட வேலைகளை செய்து வாழ்க்கையை நடத்தும் 27 வயதான இளைஞர் ஒருவருக்கு திருமண ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய திருமண வைபவம் ஆரம்பித்துள்ளது. மணமகனுக்கு மோதிரம், அணியும் சந்தர்ப்பம் வந்துள்ளது. இதன்போது மணமகன் தனது மோதிர விரலுக்கு பதிலாக நடுவிரலை நீட்டியுள்ளார். சிறு வயதில் ஏற்பட்ட விபத்தில் தனது மோதிர விரலை குறித்த இளைஞன் இழந்துள்ளார்.

இதனால் அவமதிப்பு ஏற்பட்டதாக எண்ணிய மணப்பெண் உடனடியாக மணமேடையை விட்டு தனது அறைக்கு ஓடியுள்ளார்.

எனினும் இரண்டு தரப்பு உறவினர்களும் திருமணத்தை நடத்த எவ்வளவு முயற்சித்த போதிலும் மணமகள் சம்மதிக்கவே இல்லை. இதனால் இரு தரப்பினரும் திருமணத்தை நிறுத்திவிட்டு தங்கள் வீடுகளுக்கு சென்றுள்ளனர். (இ-7)

## வெள்ளவத்தையில் துப்பாக்கிப் பிரயோகம்

### முக்கிய நபர் காயம், இருவர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையில் நேற்று அதிகாலை பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் போதைப் பொருள் வர்த்தகத்துடன் ஈடுபடும் பிரதான நபரொருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் மீதே பொலிஸார் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பிரதான நபர் உட்பட இருவர் காயமடைந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## "Youth With Talent Reality Show" இளைஞர் -யுவதிகள் விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்ற **(Youth With Talent Reality Show)** நிகழ்வு இவ்வாண்டும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த போட்டி நிகழ்வுக்கு இளைஞர் யுவதிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் 13 - 29 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள் பங்குபற்ற முடியும். விசேட திறமைகள் மற்றும் அதிசய செயற்பாடுகள், வியத்தகு செயல்கள், சாதனைக்குரிய விடயங்களை செய்யக் கூடியவர்களுக்கான போட்டி இதுவாகும்.

கடந்த இரண்டு வருடங்களாக இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய முதல் 10 இளைஞர்-யுவதிகளுக்கு தேசிய மட்டத்தில் மில்லியன் பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இவ்வாண்டு நடைபெற இருக்கும் இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர்-யுவதிகள் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற காரியாலயத்துடன் அல்லது 021-222-2526 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களுடைய பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இவ்வாண்டு மாவட்ட போட்டிகள் நடைபெறாது நேரடியாக மாகாணப் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் தெரிவு செய்யப்படுவோர் தேசிய மட்ட போட்டியில் பங்கு பற்ற முடியும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கான மாகாணப் போட்டிகள் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் நேரடியாகவும் கலந்து கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு மாவட்ட காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மேலும் நிகழ்த்தப்படும் **Reality show** நிகழ்வானது அரை மணித்தியாலயத்திற்கு உட்பட்டதாகவும் மேடையில் அரங்கேற்றக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

### முதுகெலும்பில்லாத அரசாங்கம்

## போராட்டம் நடத்துவதற்காக சம்பளத்தை அதிகரிக்க முடியாது

### நிதியமைச்சர் மங்கள தெரிவிப்பு

(கொழும்பு)

போராட்டம் நடத்துவதற்காக சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் ஓர் முதுகெலும்பு இல்லாத அரசாங்கமாகும். வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவதற்காக அவர்கள் கேட்பது எல்லாவற்றையும் வழங்க முடியாது.

இவ்வாறு சம்பளங்களை வழங்கினால் பாரியளவில் அனைத்து தரப்பினரும் சம்பள உயர்வு போராட்டங்களை நடத்த தொடங்குவர். போராட்டங்களுக்காக சம்பள உயர்வு வழங்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

புகையிரத தொழிற்சங்கங்களினால் முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை நிறைவேற்றுமாறு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அண்மையில் அமைச்சரவையில் கோரியிருந்தார்.

இந்த நிலையில் குறித்த கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமென சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவும் அமைச்சரவையில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரிட்டன் ரக்பி வீரர்கள் மர்ம மரணம்; சந்தேகநபர் 10ம் திகதிவரை மறியலில்

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்ட பிரித்தானியாவின் இரண்டு ரக்பி வீரர்களின் மர்மமரணம் குறித்து கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 10ஆம் திகதி இலங்கை வந்த 22 பேர் கொண்ட பிரித்தானிய ரக்பி அணி, மே 12,ம் திகதி கொழும்பில் இடம்பெற்ற சிநேகபூர்வ ரக்பி போட்டிகளில் பங்குகொண்டது.

இந்த போட்டியில் விளையாடிய இரண்டு பிரித்தானிய நாட்டு வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். பெட் தோமஸ் ரீட் மற்றும் ஹாவட் தோமஸ் அன்ரு ஆகிய இருவரே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்த வீரர்களின் மரணத்திற்கு அதிக போதைப்பொருள் பாவனையே காரணமென தெரியவந்துள்ளது. இதனையடுத்து ஆட்டோச் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், பிரித்தானிய ரக்பி வீரர்கள் இருவருக்கும் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த சந்தேகநபரை வெள்ளவத்தையில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## செய்தித்துளிகள்

### 10 சிறைச்சாலைகளில் 12 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

10 சிறைச்சாலைகளில், உயர் பதவிகளை வகிப்போரில் 12 பேருக்கு, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீதி அமைச்சினால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அதில், சிறைச்சாலை அதிகாரிகள் நால்வர், சிறைச்சாலை உதவி அதிகாரிகள் ஐவர் மற்றும் சிறைக் காவலர்கள் மூவர் அடங்குகின்றனர். (இ-7)

### வாகனம் கவிழ்ந்ததில் 3 இராணுவத்தினர் காயம்

(சாவகச்சேரி)

கைதடிப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10.20மணியளவில் கொடிகாமம் பகுதியில் இருந்து பலாலி நோக்கி இராணுவத்தினருடன் பயணித்த மகேந்திரா வாகனம் கவிழ்ந்ததில் 3பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மூவரும் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் இருவர் மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் 25வயது ஜெயசேன, 30வயது குமாரி, 27வயது ரன்முத்து ஆகியோரே காயமடைந்துள்ளனர். (இ-30)

### பழுதடைந்த நிலையில் பிக்கப்



(கரணவாய்)

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை காரியாலயத்திற்கு முன்பாக 10 வருடத்திற்கு மேலாக பிக்கப் வாகனம் ஒன்று பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. (இ-60)

### கூட்டுறவு இயக்குநர் சபை தெரிவு

(கரணவாய்)

கரவெட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் இயக்குநர் சபை தெரிவு நாளை மறுதினம் 4 ஆம் திகதி நடைபெறும். இரு குழுக்கள் உச்ச தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். (இ-60)

### விபத்தில் குடும்பஸ்தர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மோட்டார் சைக்கிள் - ஆட்டோ என்பன ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேல்திக சிகிசசைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் அரசடி, சாவகச்சேரியைச் சேர்ந்த 37வயது குமாரசாமி திலீபன் என்பவா தோள்பட்டையில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-30)


### புதையல் தோண்டிய நால்வர் கைது

(திருமலை)

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பிரதேசத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் கீழ் நான்கு பேரை நேற்றுக்காலை கைதுசெய்துள்ளதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் தோப்பூர் மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவித்த திருகோணமலை பொலிஸார் இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சிறுவர் அரங்கம்

## சிங்கராஜா எதிர்பார்த்த மரியாதை!



சிங்கராஜா கம்பீரமாக நடந்து வந்தது. வழியில் பார்த்த விலங்குகளும் பறவைகளும் வணக்கம் சொல்லிவிட்டுச் சென்றன.

'பரவாயில்லையே. எனக்கு இன்னும் இந்தக் காட்டில் செல்வாக்கு நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது. வணக்கம் சொல்வதிலேயே அது தெரிகிறது' என்று நினைத்தது சிங்கராஜா.

அப்போது அந்தப் பக்கமாக வந்த கரடி, சிங்கராஜாவைக் கவனிக்காமல் வேகமாகக் கடந்து சென்றது. உடனே சிங்கராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

"கரடியே, இங்கே வா" என்று காடு அதிரும்படி கர்ஜனை செய்தது.

குரல் கேட்டு பயந்துகொண்டே ஓடிவந்தது கரடி.

"என்னைப் பார்த்தும் பார்க்காததுபோல் செல்லும் அளவுக்கு நீ பெரியவனாகிவிட்டாயா? அரசருக்கு வணக்கம் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையான நாகரிகம் கூட உனக்குத் தெரியாதா?" என்று கோபத்துடன் கேட்டது சிங்கராஜா.

"மன்னியுங்கள் சிங்கராஜா. என்னுடைய குட்டியைக் காணவில்லை. அந்தத் துயரத்தில் இருந்ததால் உங்களைக் கவனிக்கவில்லை. இப்போது வணக்கம் சொல்லிவிடுகிறேன்" என்று கைகூப்பியது கரடி.

"என்னைவிட உன் குட்டி காணாமல் போனதுதான் உனக்குப் பெரிய விடயமாக இருக்கிறதா? இந்த ஆணவத்துக்குச் சரியான தண்டனையை இப்போதே அளிக்கிறேன். யாரங்கே, உடனே சபையைக் கூட்டுங்கள்" என்று உத்தரவிட்டது சிங்கராஜா.

சற்று நேரத்தில் சபை கூடியது. விலங்குகளும் பறவைகளும் என்ன நடக்குமோ என்ற பதற்றத்தில் அமர்ந்திருந்தன.

"இன்று நானே வழக்கு கொண்டு வந்திருக்கிறேன். கரடி எனக்கு வணக்கம் சொல்லாமல் ஆணவமாக நடந்துகொண்டது. இதற்குத் தண்டனையாகக் கரடியைக் காட்டிலிருந்து விலக்கி வைக்கிறேன். ஒரு மாதத்துக்குப் பிறகு என்னிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு மீண்டும் காட்டுக்குள் வசிக்கலாம்" என்று தீர்ப்பு வழங்கியது சிங்கராஜா.

"சிங்கராஜா மன்னியுங்கள். நேற்று கரடியின் குட்டி காணாமல் போய்விட்டதால் துயரத்தில் உங்களைக் கவனிக்கவில்லை. மற்றப்படி உங்களை மனதளவில்கூட அவமரியாதை செய்ய வேண்டும் என்று நினைக்காது கரடி" என்று புலி கூறியது.

"இப்படிக் கரடிக்கு ஆதரவாக யாராவது பேசினால் அவர்களுக்கும் தண்டனை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒரு மாதமும் கரடியிடம் யாரும் பேசக் கூடாது" என்ற சிங்கராஜா வேகமாகச் சபையை விட்டு வெளியேறியது.

கரடிக்கு உதவ முடியாத வருத்தத்தில் விலங்குகளும் பறவைகளும் கலைந்து சென்றன. காட்டின் எல்லைக்குச் சென்று வசிக்க ஆரம்பித்தது கரடி.

ஒரு வாரத்துக்குப் பிறகு வன உலாவுக்குக் கிளம்பியது சிங்கராஜா. திடீரென்று காலில் ஏதோ குத்தியதுபோலிருந்தது. உடைந்த கண்ணாடி சீசா, சிங்கராஜாவின் பாதத்தைக் கிழித்துவிட்டது. இரத்தம் கொட்டியது. வலி உயிர் போனது.

சிங்கராஜாவின் அலறலைக் கேட்டு புலி வந்தது.

"உடனே வைத்தியரை அழையுங்கள். இரத்தம் கொட்டுகிறது. வலியைத் தாங்க முடியவில்லை" என்றது சிங்கராஜா.

"கரடி வைத்தியர் காட்டுக்குள் இல்லை ராஜா. உங்கள் தண்டனைக்காக எல்லையில் இருக்கிறது"

"உடனே அழைத்து வாருங்கள்."

"பேசினால் தண்டனை என்று சொன்னீர்களே...."

"ஐயோ... விவாதிக்க இது நேரமில்லை. இப்போதே கரடி வந்தாக வேண்டும். இது என் உத்தரவு"

அடுத்த ஒரு மணி நேரத்தில் கரடி வந்து சேர்ந்தது. சிங்கராஜாவுக்கு வணக்கம்சொன்னது. மருந்து போட்டது.

"சிங்கராஜா, ஒரு வாரத்துக்குத் தினமும் மருந்து வைத்துக் கட்ட வேண்டும். அப்போதுதான் குணமாகும். ஆனால் தினமும் என்னால் எல்லையில் இருந்து வர இயலாது. அதனால் நீங்களே மருந்துக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்" என்றது கரடி.

"தண்டனை பெற்றும் ஆணவம் மட்டும் குறையவில்லை போலிருக்கிறது" என்றது சிங்கம்.

"நான் என்ன தவறு செய்தேன்? எனக்கு அளிக்கப்பட்ட தண்டனை அநியாயம் என்பது இந்தக் காட்டுவாசிகளுக்கும் ஏன் உங்களுக்கும் கூடத் தெரியும். ஆனால், நான் அநாவசியமாகத் தண்டனையை அனுபவித்து வருகிறேன். மருத்துவரின் கடமை உயிரைக் காப்பாற்றுவதுதான் என்பதால் கூப்பிட்ட உடனே ஓடிவந்தேன். எல்லையிலிருந்து என் குட்டியை விட்டுவிட்டு வர முடியாது. மன்னியுங்கள்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பியது கரடி.

"கரடியே, சற்று நில்லு. இப்போதே உன் தண்டனையை இரத்துச் செய்கிறேன். இனிமேல் யாருக்கும் இப்படி அநாவசியமாகத் தண்டனை அளிக்க மாட்டேன். மரியாதை என்பது தானாக வரவேண்டும், கேட்டுப் பெறக் கூடாது என்பதையும் புரிந்து கொண்டேன்" என்று வலியுடன் கூறியது சிங்கராஜா.

நன்றி சொன்ன கரடி, தினமும் சிங்கராஜாவின் காலுக்கு மருந்து போட்டு ஐந்தே நாட்களில் குணப்படுத்திவிட்டது.

இப்போது மீண்டும் வன உலாவுக்குக் கிளம்பிவிட்டது சிங்கராஜா.

## பொன்மொழிகள்

- வீணாகாத ஒரே விடயம் உழைப்பு மட்டுமே! - டால்ஸ்டாய்
- நமது வாழ்வை வளமாக்குவது நம்பிக்கைதான்! - நேரு
- அன்பும் இரக்கமுமே வாழ்க்கையின் அடிப்படைகள்! - வள்ளலார்
- நாம் காட்டும் பணிவிற்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக ஏதேனும் ஒரு நன்மையைப் பெற வேண்டும் என்று எதிர்பார்ப்போம் எனில் நம்மிடம் உண்மையான அன்பு உருவாகாது. -விவேகானந்தர்
- சிறுசிறு செலவுகளைப் பற்றிக் கவனமாயிரு. ஒரு சிறு ஓட்டையே பெரிய கப்பலை மூழ்கடித்துவிடும். - பெஞ்சமின் பிராங்கிளின்
- உலகம் களிமண்ணைப் போன்று மிருதுவானது இல்லை. இரும்பைப் போன்று மிகவும் உறுதியானது. நீ உன் விடாமுயற்சியாலும் கடும் உழைப்பாலும்தான் இந்த உலகத்தில் உனக்கென்று ஒரு இடத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். - எமர்சன்
- கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். - அரிஸ்ரோட்டில்
- ஒரு மனிதன் செய்யக்கூடிய செயல்கள் அனைத்திலும் மிகமிகச் சிறந்தது தனக்குத்தானே முற்றிலும் நல்லவனாக இருப்பதுதான். - பிராய்டு
- பொறாமையினால் ஒருவனின் மனதில் உருவாகும் விஷம் இறுதியில் அவனையே அழித்து விடும். - நியெட்ஸே
- மன நிறைவுதான் ஒருவனைப் பணக்காரனாக்குகிறது. பேராசைக்காரர்களிடம் இதை எடுத்துச் சொல்லுங்கள். - சாஅதி
- தன் எடையைப் போல் பத்து மடங்கு அதிக எடையுள்ள தானியத்தை எளிதில் சுமக்கும் எறும்பைப் பார்த்துமா உங்கள் சிந்தனை இன்னும் விழிக்கவில்லை - திரு.வி.க.
- வாழ்க்கையில் உயரிய குறிக்கோளின்றி அங்குமிங்கும் அலைந்துவிட்டுக் கடைசியில்வெற்றாய்முடிவது மனித வாழ்வாகாது. - அஸ்லாமா இக்பால்
- வானம் சுருங்கில் தானம் சுருங்கும் - ஔவையார்

## கல்வி கற்கலாம்!



உலகம் உனக்காகக் காத்திருக்கு
இடத்தைப் பிடிக்க விரைந்து வா
பறக்கும் இறகாய் கல்வி தான்
பறந்தால் எல்லை எளிதுதான்
படித்தால் வெற்றி உறுதி தான்.

வறுமையை ஓட்டும் கல்விதான்
உயரச்செய்யும் உன்னைத் தான்
விவேகம் இல்லா வேகம் வீண்
கல்வி இல்லா வாழ்வும் வீண்
கற்றால் விடியல் உறுதி தான்.

அழியாச் செல்வம் கல்விதான்
அழியாப் புகழைத் தந்திடும்
பணத்தையும்படிப்பால்வென்றிடலாம்
பல பதவியில் நீயும் அமர்ந்திடலாம்
படித்தால் மட்டுமே இது நடக்கும்.

கற்றல் முதலில் கடினம்தான்
தொடர்ந்தால் அதுவே எளிதுதான்
இமயமாய் உயர்ந்து நீ நிற்க
உதவும் கருவி கல்வி தான்
கற்றே நீயும் கனி தருவாய் !

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.08 02

- 1798 - பிரெஞ்சுப் புரட்சிப் போர்கள்: நைல் நதிப் போரில் பிரித்தானியா வெற்றி பெற்றது.
- 1916 - முதலாம் உலகப் போர்: லியனார்டோ டாவின்சி என்ற இத்தாலியப் போர்க்கப்பல் ஆஸ்திரியாவினால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: தோல்வியடைந்த ஜேர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதித்த நட்பு அணி நாடுகளின் பொட்ஸ்டாம் மாநாடு நிறைவடைந்தது.
- 1989 - யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
- 1994 - பலாலி இராணுவத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கியதில் உலங்கு வானூர்தி, கவச வண்டி என்பன தாக்கியழிக்கப்பட்டன.
- 2006 - திருகோணமலை மாவட்டத்தில் மகிந்தபுர, கிளிவெட்டி, பாலதோப்பு, பச்சனூர் இராணுவ முகாம்களைத் தாக்கி மூதூர் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்புலிகள் உள்நுழைந்தனர்.

### பிறப்பு

- 1859 - ஆபிரகாம் பண்டிதர், தமிழகத் தமிழிசைக் கலைஞர் (இ. 1919)
- 1876 - பிங்கலி வெங்கையா, இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் (இ. 1963)
- 1913 - சேவியர் தனிநாயகம், ஈழத்துத் தமிழறிஞர், வரலாற்றாளர் (இ. 1980)
- 1929 - வித்தியா சரண் சுக்லா, இந்திய அரசியல்வாதி, அமைச்சர் (இ. 2013)
- 1930 - ஏ.பி.வெங்கடேசுவரன், இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலர் (இ. 2014)
- 1945 - பங்கர் ராய், இந்தியக் கல்வியியலாளர், செயற்பாட்டாளர்
- 1958 - அர்சாத் அயூப், இந்தியத் துடுப்பாளர்

### பிறப்பு

- 1996 - வி.பி.கணேசன், இலங்கைத் தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி, நடிகர், தயாரிப்பாளர்
- 2000 - நாஞ்சில் கி.மனோகரன், தமிழக அரசியல்வாதி (பி. 1929)
- 2012 - அநு. வை. நாகராஜன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1933)
- 2013 - வெ. தட்சிணாமூர்த்தி, இந்திய திரைப்பட இசையமைப்பாளர் (பி. 1919)
- 2013 - சக்தி அ.பாலையா, இலங்கையின் மலையக எழுத்தாளர் (பி. 1925)

### சிறப்பு

- குடியரசு நாள் (மாக்கடோனியக் குடியரசு)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா. | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 70 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 420 | 500 | 450 |
| தக்காளி | 120 | 160 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | — | 40 | 40 |
| கோவா | 160 | 180 | 110 | 200 | 160 |
| கரட் | 200 | 300 | 200 | 300 | 400 |
| பூசணி | 80 | 80 | 40 | 80 | 100 |
| புடோல் | 60 | 70 | 70 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 200 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 95 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 105 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 150 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 110 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 80 | 40 | 80 | 100 |
| லீக்ஸ் | 200 | 150 | 110 | 140 | 160 |
| பீற்றூட் | 150 | 140 | 100 | 200 | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 60 | 80 | 80 |
| போஞ்சி | 250 | 240 | 200 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 50 | 80 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 10 |
| தேசிக்காய் | 30 | 50 | 40 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 55 | 40-60 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 140 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 100 | 200 | 150 |
| முள்ளங்கி | 80 | 80 | 40 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 130 | 50 | 40 |

எந்த மனிதனிடம் பேராற்றலும் மன உறுதியும் இருக்கின்றதோ அந்த மனிதனிடமே அதிகாரமும் இருக்க வேண்டும். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முதலமைச்சரின் கோரிக்கைக்கு அரசின் பதில் என்ன?

பொலிஸ் அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள் இரண்டு மாத காலத்துக்குள் நாங்கள் வடக்கில் நடக்கும் வாள்வெட்டு உள்ளிட்ட சம்பவங்களை அடக்கிக் காட்டுகிறோம் என வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சவால் விட்டுள்ளார்.

இங்குதான் வடக்கு முதலமைச்சரின் ஆணித்தரமான நிலைப்பாடு வெளிப்படுகிறது.

அதாவது வடபுலத்தில் தற்போது வாள்வெட்டு உட்பட கொள்ளை, போதைவஸ்து, கடத்தல் சம்பவங்கள் நடந்த வண்ணமுள்ளன.

இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர். எனினும் இவற்றைக் கட்டுப்படுத்துவதில் இன்னமும் பொலிஸார் வெற்றி பெறவில்லை.

வட மாகாணம் முழுவதிலும் பொலிஸ் நிலையங்களும் இராணுவ முகாம்களும் இருக்கின்ற சூழ்நிலையில் வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் நீடிக்கிறது எனும்போது இதற்கான காரணம் என்ன என்ற கேள்வி எழுகிறது.

இந்நிலையில் எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பு வைப்பதாக வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் இலங்கை அரசிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அந்தக் கோரிக்கை பொலிஸ் அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள் வட பகுதியில் நடக்கும் அத்தனை குழப்பங்களையும் அடாவடித்தனங்களையும் இரண்டு மாதங்களுக்குள் நாங்கள் நிறுத்திக் காட்டுகிறோம் என்பதுதான்.

இங்குதான் முதலமைச்சரின் கோரிக்கை இருவகைச் சிக்கலை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அதாவது முதலமைச்சர் கேட்டதன்படி பொலிஸ் அதிகாரத்தை வடக்கு மாகாண சபைக்குக் கொடுப்பது என்பது ஒரு விடயம்.

இதைச் செய்யவில்லை என்றால் வடக்கில் நடக்கும் வாள்வெட்டுச் சம்பவங்களை உடனடியாகக் கட்டுப்படுத்தியாக வேண்டும்.

இதில் இலங்கை அரசு ஏதோவொன்றைச் செய்தால்தான் அது முதலமைச்சரின் கோரிக்கைக்குப் பதிலளிப்பதாக இருக்கும்.

அதேநேரம் வாள்வெட்டுக் குழுக்களை பொலிஸார் உடனடியாகக் கட்டுப்படுத்தினால் இதனை இப்போது எவ்வாறு செய்ய முடிந்தது.

முதலமைச்சர் கேட்டவுடன் வாள்வெட்டுச் சம்பவங்களை உடனடியாக நிறுத்த முடியுமென்றால், இதனை ஏலவே செய்ய முடியாமல் போனது ஏன்? என்ற கேள்வி எழும்.

இங்குதான் இலங்கை அரசுக்கும் பொலிஸாருக்கும் இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறது.

எதுஎவ்வாறாயினும் முதலமைச்சரின் கோரிக்கைக்கு இணங்கி அரசாங்கம் பொலிஸ் அதிகாரத்தை எங்களுக்குத் தரப் போவதில்லை என்பது சமகால நிலைப்பாடு.

அதேநேரம் பொலிஸ் அதிகாரத்தை எங்களிடம் தந்தால் சொல்லி இரண்டு மாதங்களுக்குள் அத்தனை அடாவடித்தனங்களையும் நிறுத்திக் காட்டுவோம் என்று வடக்கின் முதலமைச்சர் பகிரங்கமாக கூறியுள்ளார் எனும்போது,

அது வாள்வெட்டு சம்பவங்களின் பின்னணி என்ன என்பதையும் அதைக் கட்டுப்படுத்தாமல் இருப்பதன் மாயம் என்ன என்பதனையும் சர்வதேசம் நிச்சயம் புரிந்து கொள்ளும்.

இங்குதான் முதலமைச்சரின் கோரிக்கை எப்படியும் உண்மை நிலையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

# பாதாள உலகக் குழுவை ஒழிக்க மகிந்தவால் மட்டுமே முடியும் – நாமல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மட்டுமே பாதாள உலகக் குழுவின் செயற்பாடுகளை இல்லாதொழிக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மற்றும் பாதாள உலகக்குழுக்களை இல்லாதொழிக்கும் வல்லமை மகிந்தவிற்கே உண்டு.

அமைச்சரவை அமைச்சர்கள், பாதாள உலகக் குழுக்களை பாதுகாத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகின்றார்.

இதேவேளை வடக்கில் போதைப்பொருள் கடத்தல்களுடன் அமைச்சர்களுக்கு தொடர்பு உண்டு என முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

விஜயகலா தனது அமைச்சுப் பதவியை ராஜினாமா செய்திருந்த போதிலும், அண்மையில் வடக்கில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதமர் ரணிலுடன் பங்கேற்றிருந்தார் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## பொலிஸாரின் அடக்குமுறையை கண்டித்து யாழ்.உயர் தொழில்நுட்ப மாணவர்கள் கண்டன அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் மீது பொலிஸாரின் அடக்குமுறையை கண்டித்துயாழ்உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் கல்லூரியின் HND கற்கைநெறி மாணவர்களாகிய நாம் தலைநகர் கொழும்பில் எமது சக மாணவர்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து நடத்திய ஜனநாயக ரீதியிலான போராட்டத்தினை அரசாங்கம் பொலிஸாரை கொண்டு மிக வன்மையாக அடக்கி கல்வி சமூகத்தின் மீதான சுதந்திர உணர்வை பாதிப்படையச் செய்தமையை வன்மையாக கண்டிக்கிறோம்.

மேலும் நாட்டின் எதிர்காலமாகிய கல்வி சமூகத்தின் மீது அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையின் விளைவாக ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை இழந்து இருக்கிறோம்.

இவ்வாறான மனித உரிமைமீறல் செயற்பாடுகள் எமது நாட்டின் மீது சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும் விதமாக அமையும் என்பதோடு இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை செவி மடுத்து தீர்வுகளை பெற்றுக் கொள்ளும் பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவத்தை கற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இலங்கை மாணவர்கள் 18 பேருக்கு ஹிந்தி கற்க இந்தியாவில் புலமைப்பரிசில்

(கொழும்பு)

இலங்கை மாணவர்கள் 18 பேருக்கு ஹிந்தி மொழியை கற்பதற்கான புலமைப் பரிசில்களை இந்திய அரசு வழங்கியுள்ளதாக, இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 18 மாணவர்களுக்கான பயணச் செலவு, கல்விக் கட்டணம் மற்றும் ஒரு வருடத்திற்கான உணவுச் செலவு என்பன இந்த புலமைப்பரிசிலில் வழங்கப்படுகிறது.

ஆக்ராவில் அமைந்துள்ள கேந்திரியா ஹிந்தி சன்ஸ்தான் கல்வி நிறுவனத்திலேயே குறித்த மாணவர்கள ஹிந்திமொழிக்கற்கை நெறியை தொடரவுள்ளனர்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து, குறித்த மாணவர்கள் இந்தியாவிற்கு புறப்படுவதற்கு முன்னர் சந்தித்து அவர்களுககு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

குறித்த மாணவர்கள் கண்டி, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலநறுவை, யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எமில் ரஞ்சன், நியோமல் ரங்கஜீவ மீண்டும் விளக்கமறியலில்

முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ ஆகியோரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் அந்த வழக்கு விசாரணைக்கு அழைக்கபட்ட போது அவர்கள் இருவரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகளின்போது கண்டெடுத்த ரி- 56 ரக துப்பாக்கிகள் தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கை கேட்டுள்ள போதிலும் அந்த அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை செய்யப்படுவதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

மன்றில் தெரிவிககப்பட்ட விடயங்களுக்கு அமைவாக சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடித்த நீதிபதி, அன்றைய தினம் விசாரணையின் முன்னேற்ற அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டார். (இ-7)

## சிகரெட் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சிகரெட் ஒன்றின் விலை 5 ரூபாயால் அதிகரித்துள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

மதுவரி விலை 3.80 ரூபாயினால் அதிகரித்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந் நிலையில் சிகரெட் ஒன்றின் விலை நேற்று முன தினம் நள்ளிரவு முதல் 5 ரூபாயால் அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பல்லி விழுதலின் பலன்கள்**

தலை - கலகம்
கூந்தல் - லாபம்
உச்சந்தலை - மரணம்
நெற்றி - பட்டாபிஷேகம்
முகம் - பந்து தரிசனம்
புருவம் - ராஜானுக்ரகம்
மேலுதடு - தனவிரயம்
கீழுதடு - தனலாபம்
மூக்கு - வியாதிசம்பவம்
வலது செவி - தீர்க்காயுள்
இடது செவி - வியாபார லாபம்
முகவாய்க்கட்டை - ராஜதண்டனை
வாய் - பயம்
கழுத்து - சத்ரு நாசம்
வலது புஜம் - ஆரோக்கியம்
இடது புஜம் - ஸ்த்ரீஸம்போகம்
வலது மணிக்கட்டு - பீடை
இடது மணிக்கட்டு - கீர்த்தி

(தொடரும்)

## சத்திய தரிசனம்



### அதிக பேச்சு வேண்டாமே!

❖ சகமனிதர்களிடம் அன்பு செலுத்தாமல், மணிக்கணக்காக தியானம் செய்வதால் பலனேதும் இல்லை. உண்மையான ஆன்மீக சாதனை என்பது அனைவருடனும் கைகோர்த்து சமுதாயம் முழுமைக்குமாக உழைப்பது தான்.

❖ நாடுகள் பல ஆயினும் மண் ஒன்றே. நட்சத்திரங்கள் பல ஆயினும் வானம் ஒன்றே. பசுக்கள் பல ஆயினும் பால் ஒன்றே. நகைகள் பல ஆயினும் தங்கம் ஒன்றே. இவ்வாறு அனைத்து உயிரினங்களிலும் ஒன்றாகக் கருதி சேவை புரியும் போது தான் ஆனந்தம் ஏற்படுகிறது.

❖ உண்மையான ஆன்மிக சாதனை என்பது வெறும் ஜெபமோ, தியானமோ அல்ல. அனைத்து உயிர்களுக்காகவும் பாடுபடுவதே ஆன்மிகம்.

❖ சக்தியை வீணாக்காதீர்கள். சக்தி தான் இறைவன், புனிதமற்ற பார்வையால், தீய எண்ணங்களால், தீயவற்றைக் கேட்பதால், அதிகமாக பேசுவதால் இன்றைய இளைஞர்கள் அதிகமான சக்தியை இழக்கிறார்கள். இதனால் மௌனத்தை அதிகம் கடைப்பிடிக்க வேண்டும்.







அரியாலை திருமகள் சனசமூக நிலைய 66 வது ஆண்டு விழாவை முன்னிட்டு அமரர் சின்னத்துரை தங்கராசா ஞாபகார்த்தமாக நடைபெற்ற உள்ளூர் ரீதியிலான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் அரியாலை திருமகள் சனசமூக நிலையம் முதலாமிடத்தையும் அரியாலை கலைமகள் சனசமூக நிலையம் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர் .வெற்றி பெற்ற அணியினரையும் விருந்தினர்களையும் படங்களில் காணலாம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



# வெற்றிநடை தொடர்கிறது பிளே ஓவ் சுற்றில் ரில்கோ



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற லீக் சுற்றின், 42 ஆவது போட்டியில் ரில்கோ கொங்கியூறஸ் அணியை எதிர்த்து ரிங்கோ ரைரன்ஸ் அணி மோதியது.

ரிங்கோ ரைரன்ஸ் அணி, போட்டியின் தொடக்கத்தை கலக்கலுடன் ஆரம்பித்தது.

5 மற்றும் 10 ஆவது நிமிடங்களில் அடுத் தடுத்து இரண்டு கோல் களைப் போட்டு, ரில்கோ அணிக்கு அதிர்ச்சிய ளித்தது.

அந்த இரண்டு கோல் களையும், முஹமட் அனுசாத் மற்றும் உபைதுல்லா இஹாம் ஆகியோர் அடித்தனர்.

எதிர்பாராத அந்தக் கோல்களில் இருந்து, சுதாகரித்து எழுந்த, ரில்கோ அணி 23, 27 மற்றும் 43 ஆவது நிமிடங்களில்அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டு, மீண்டது. மூன்று கோல்களையும் செ.தனேஸ் அடித்தார்.

தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய ரில்கோ கொங்கியூறஸ் அணிக்கு, செ.தனேஸ் 70 ஆவது நிமிடத்தில் மேலுமொரு கோல் அடித்தார்.

ரில்கோ அணியின், வானா ஹசான்ரி 78, மற்றும் 84 நிமிடங்களில் இரண்டு கோல்களை அடித்தார்.

முடிவில் ரில்கோ கொங்கியூறஸ் அணி, 06:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

பங்குபற்றிய அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று, ரில்கோ அணி, ஏற்கனவே பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றிருந்த நிலையில், இந்த வெற்றியுடன், 21 புள்ளிகளுடன், முதலாம் அல்லது இரண்டாம் நிலையில் பிளே ஓவ் சுற்றில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. (க-26)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்



இளவாலை எஸ்.ரி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் பாடும்சுறா அணியை எதிர்த்து புரட்சி அணி விளையாடியது. இப் போட்டியில் 5:3 என கோல் கணக்கில் புரட்சி அணி வெற்றி பெற்றது.

# கிளியூர் கிங்ஸ் அணி வெற்றி



வடக்கு- கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற லீக் சுற்றின், 37 ஆவது போட்டியில் கிளியூர் கிங்ஸ் அணியை எதிர்த்து முல்லை பீனிக்ஸ் அணி மோதியது.

போட்டியின் முதல் பாதியில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறவில்லை. தொடர்ந்து, இரண்டாவது பாதியாட்டத்தில் 83 ஆவது நிமிடத்தில் கிளியூர் அணி யின் ஜோசப் மைக்கல் கோல் ஒன்றை அடித்தார்.

முடிவில் கிளியூர் கிங்ஸ் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணம் 2வது சுற்றில் யாழ்.சென்றல் அணி

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டு சுற்றுப் போட்டியின் 1 ஆவது சுற்றில் 3 ஆவது போட்டி கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ். சென்றல் அணி,பற்றீசியன்ஸ் அணியை 14 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 30 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 188 ஓட்டங்களை பெற்றது.

லதுாஸன் -29, றஜீவ் குமார்-34, மதூ ஸன்-41, நிரோஜன்-25 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் பற்றீசியன்ஸ் அணியை சார்ந்த றதீஸன்-01, றோபேட்-3 டனேசியஸ்-1 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 29.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

தனுஜன்-42, கஸ்ரோ-36, றதீஸன்-42 ஓட்டங்களைப் பெற்றனர்.

கரிகரன்-1 சுபாதீஸ்-1, தீபன்-1, கிரிசான்-2, றஜீவ் குமார்-1, லதுாஸன் -3 இலக்கினை கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளை யாட்டுக் கழகம் 9 வது ஆண்டாக நடத்தும் தரவரிசை (Rating) பட்டியலுக்கு யாழ்.சென்றல் அணி 6.02 புள்ளிகளையும் பற்றீசியன்ஸ் அணி 2.44 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)



## வாகன இறக்குமதி...

குறைவான வாகனங்களுக்கான இறக்குமதி வரியானது 1.5 மில்லியன் ரூபாவாகவும், ஹைபிரிட் மற்றும் மின்சார வாகனங்களுக்கான இறக்குமதி வரி 1.25 மில்லியனாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

இவ்வரி திருத்தங்களுக்கு அமைய 1000 இயந்திர வலுவிற்கு குறைவான பெற்றோல் வாகனங்களின் விலை 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவினாலும், ஹைபிரிட் மற்றும் மின்சார வாகனங்கள் 4 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவினாலும் அதிகரிக்கப்படுவதாக இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கம் அறிவித்துள்ளது. (ம)

## சிறந்த ஊடகவியலாள...

யின் வைத்திய நிபுணர் சி.சிவன்சுதன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வலம்புரி-சங்குநாதம் பத்திரிகையில் வைத்திய நிபுணர் சி.சிவன்சுதன் அவர்கள் எழுதிவரும் சுகாதார மருத்துவம் சார்ந்த தகவல்களுக்கும் ஆய்வுநிலைக் கட்டுரைகளுக்குமாக இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு மௌன்லேனியா ஹோட்டலில் இடம்பெற்ற இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் விருது வழங்கும் நிகழ்வில் வைத்து வைத்திய நிபுணர் சி.சிவன்சுதன் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. (ம)

## வவுனியாவில் இளை...

ஜெயசிங்கம் நிரோஜன் என்ற 26 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு கொலை செய்யபட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர். (ம)

(இது தொடர்பில் முன்னர் கிடைக்கப்பெற்ற செய்தி உள்ளே)

## வடக்கு, கிழக்கு உள்ளூ...

ள்ளது.

இதற்கமைவாக உலக வங்கியின் 50 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி மற்றும் 22.5 மில்லியன் யூரோக்கள் மூலம் வழங்கப்படும் நிதி உதவியின் கீழ் வட மாகாணத்தில் 34 உள்ளூராட்சி மன்றங்கள், கிழக்கு மாகாணத்தில் 45 உள்ளூராட்சி மன்றங்கள், வட மத்திய மாகாணத்தில் 25 உள்ளூராட்சி மன்றங்கள், ஊவா மாகாணத்தில் 28 உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கும் வகையில் பிரதேச அபிவிருத்தி திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம)

## கொமன்வெல்த் பொதுச்...

சிங்கவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அதேவேளை, இன்றும் நாளையும் அமைச்சர்கள் மலிக் சமரவிக்ரம, பைசர் முஸ்தபா, சாகல ரத்நாயக்க, ரஞ்சித் மத்துமபண்டார, அகிலவிராஜ் காரியவசம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரையும் பற்றீசியா ஸ்கொட்லண்ட் சந்தித்துப் பேசவுள்ளார்.

2016 ஏப்ரலில் கொமன்வெல்த் பொதுச் செயலராகப் பதவியேற்ற பின்னர் பற்றீசியா ஸ்கொட்லண்ட் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது பயணம் இதுவாகும். (ம)

## முன்னாள் போராளிக்கு...

வட்டக்கச்சியை சேர்ந்த முன்னாள் போராளியான சு.சிவகுமார் என்பவருடைய வீட்டுக்கு நேற்று அதிகாலை 2.30 மணிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த நபரை தாக்குவதற்கு முயற்சி செய்துள்ளனர். பின்னர் வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிளை சேதமாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த விடயம் குறித்து தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு சென்றுள்ளார். அங்கு தமிழ் பொலிஸார் இல்லை என தெரிவித்து பின்னர் வருமாறு தெரிவித்துள்ளனர். மீண்டும் சென்ற அவரை 3 மணித்தியாலங்கள் வரை காத்திருக்க வைத்துவிட்டு, அவருடைய விலாசத்தை கேட்டுள்ளனர்.

அப்போது இராமநாதபுரம் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்யுமாறு தெரிவித்துள்ளனர். அங்கிருந்து இராமநாதபுரம் சென்றுள்ளார். 2 மணியளவில் அவரிடம் முறைப்பாட்டை பதிவு செய்த பொலிஸார், உடனடியாக வந்து விசாரணை செய்ய முடியாது என்றும் நாளை (இன்று) வீட்டுக்கு வந்து சேதவிபரங்களை பார்ப்பதாக தெரிவித்துள்ளனர்.

தான் ஒரு முன்னாள் போராளி என்றும் தன்னால் இரு கால்களும் சரியாக இயங்க முடியாத நிலையில் இருந்தும் காலையில் இருந்து ஒரு முறைப்பாடு பதிவு செய்வதற்கு இரண்டு மணிவரை அலைக்களிக்கப்பட்டுள்ளேன். எனது குடும்பத்தினருடன் வீட்டில் இருப்பதற்கு பாதுகாப்பில்லாமல் உள்ளது. பொலிஸார் இந்த விடயம் குறித்து அசண்டையீனமாக இருக்கிறார்கள். மேலதிகாரிகள இது குறித்து கவனம் எடுக்க வேண்டும் என்றும், தான் புனர்வாழ்வு பெற்றவர் என்றும் தனக்கு எந்த எதிரிகளும் இல்லை. தான் நிம் மதியாக வாழ வழிசெய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார் (ம-9)

## வயிற்றை வெட்டிய...

மேற்படி உயிரிழந்தவராவார்.

கடந்த 23ஆம் திகதி வயிற்று வலி அதிகமானதால் குறித்த குடும்பஸ்தர் வலி தாங்க முடியாமல் பிளேட்டினால் 3 தடவை வயிற்றில் வெட்டியுள்ளார். உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு 24ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று நண்பகல் உயிரிழந்துள்ளார். இந்த மரண விசாரணையை தென்மராட்சி மரண விசாரணை அதிகாரி இ.இளங்கீரன் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## எதிர்க்கட்சி தலைவர்...

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோரும் உரித்து பொது எதிரணிக்கு இல்லை. அரசாங்கத்தில் அமைச்சர்களாக அங்கம் வகிக்கும் கட்சியொன்றின் உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க முடியாது. பொது எதிரணியினரின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. இதன் காரணமாகவே பொது எதிரணியினருக்கு எதிர்க்கட்சித்தலைவர் பதவியை வழங்க முடியாது என்ற தீர்மானத்திற்கு சபாநாயகர் வந்திருக்கின்றார் என எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பொது எதிரணியினர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோருவது என்பது பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு முரணான செயற்பாடாகவே உள்ளது. எனவே இந்த விடயத்தை புரிந்துகொள்ள அவர்கள் வேண்டியது அவசியமானதாகும் எனவும் சம்பந்தன் வலியுறுத்தி உள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமக்கு வழங்கவேண்டுமென்று சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் பொது எதிரணியினர் கோரி வருகின்றனர். இதற்கான கடிதத்தையும் சபாநாயகரிடம் அவர்கள் கையளித்துள்ளனர். பொது எதிரணியினரான தம்மிடம் 70 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கையில் 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பொது எதிரணியினர் வாதிட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கிராம அலுவலர்களின் அடையாள அலுவலகப் பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 30.07.2018ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.20 மணியளவில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வண்ணார்பண்ணை வட கிழக்கு ஜே/100 கிராம அலுவலரான இராசதுரை யேசுதாசன் அவர்களது அலுவலகம் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டு அவரது சொந்த பெறுமதி வாய்ந்த உபகரணங்கள், மோட்டார் சைக்கிள் என்பன சேதமாக்கப்பட்டமையைக் கண்டித்து எதிர்வரும் காலங்களில் கிராம அலுவலர்கள் தமது அலுவலகத்தில் கடமையாற்றும் போது அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரியும் தமது சக உத்தியோகத்தருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலுக்கு தமது உணர்வை வெளிப்படுத்தும் முகமாகவும் இன்று வியாழக்கிழமை அனைத்து கிராம அலுவலர்களும் தமது பிரிவு அலுவலகத்திற்கு செல்லாது தத்தமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றுமாறு யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (ம)

## அபிவிருத்தி மக்களின்...

கப்பட்டதுடன், இரண்டு மாடி வர்த்தக தொகுதிகளுடன் கூடிய ஹிங்குரக்கொட புதிய பஸ் தரிப்பிடத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி ஏற்பட்ட மாற்றத்தின் மூலம் இந்த நாட்டு மக்கள் எதிர்பார்த்த அபிவிருத்தியின் நன்மைகளை பெற்றுக்கொடுக்கும் பாரிய வேலைத்திட்டங்களை அரசாங்கம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

## வடக்கு காணிகளை...

இராணுவத்தளபதி நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்டார். இதன்போது கட்டுநாயக்கா வில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் தாம் உலங்கு வானூர்தியில் பயணித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மக்களின் நலன் கருதி இராணுவம் எந்த வகையான உதவியை வழங்கலாம் என்பது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் காணிகளை துரித கதியில் விடுவிப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகயை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் முதலமைச்சருடம் கலந்துரையாடியதாகவும் கூறியுள்ள இராணுவத்தளபதி இதேவேளை பருவப்பெயர்ச்சிக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னராக எவ்வாறான உதவிகளை பொதுமக்களுக்கு இராணுவம் வழங்க முடியும் என்பது குறித்து ஆராய்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இராணுவ அதிகாரிகள் சந்தித்து அவர்களின் முன்னெடுப்புகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் சில காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றை எந்த வகையில் விடுவிப்பது குறித்து மீள்குடியேற்ற அமைச்சுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் இராணுவத்தின் இருப்பிடத்திற்கும் சில தேவைப்பாடுகள் உள்ளதால் அது பற்றியும் ஆராயப்படும் என இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார்.(ம)

## விபத்துக்குள்ளான...

திட்டத்தில் வசிக்கும் கே.சஞ்சீவன் (வயது 29) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை 12 மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த (இன்ரசிற்றி) புகையிரதம் நெடுங்குளம் சந்தியை கடந்தவண்ணம் இருந்துள்ளது. அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த 3 இளைஞர்கள் புகையிரதத்துடன் மோதியுள்ளனர். இவர்கள் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை.

இந்த கோர விபத்தில் சந்திரகுமார் என்பவர் 26 அடி தூரத்துக்கும் கிருசாந் என்பவர் 75 அடி தூரத்துக்கும் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றைய இளைஞர் படுகாயமடைந்திருந்தார். குறித்த இளைஞரே நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

# இலவச பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் யாழ்ப்பாண பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் Graphic Designing பயிற்சி நெறியானது இலவசமாக நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளோர் தமது சுயவிரக்கோவையுடன் 07.08.2018ஆந் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விதாதா வள நிலையம், யாழ்ப்பாணம் (பழைய பிரதேச செயலகம் வளாகம், சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக) தொ.பே. இல:0212224093 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (ம)

# பரிசில் தினம்

(யாழ்ப்பாணம்)

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் பரிசில் தினம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வித்தியாலய நடராஜர் கலையரங்கத்தில் வித்தியாலய முதல்வர் வி.சிவனேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மாநகர சபை உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் பிரதம விருந்தினராகவும் ஜே/81 கிராம சேவகர் எச். சேந்தன் சிறப்பு விருந்தினராகவும் ஜே/83 கிராம சேவகர் திருமதி எம்.கோபிகா சாளினி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## இலங்கைக்கு..

யப்பட்டுள்ளனர்.

தமிழக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது அவர்களால் இலங்கைக்கு கடத்த முற்பட்ட, குண்டுகளை வெடிக்க செய்வதற்காக பயன்படுத்தப்படும். 5 ஆயிரத்து 600 டெட்டனேட்டர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது இராமேஸ்வரம் பொலிஸாரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம)

மெகா பவர்
திகதி 01/08/2018
சீட்டிழுப்பு இலக்கம் 260
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
A 20 09 18 35 77
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01-08-2018
சீட்டிழுப்பு இலக்கம் 861
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
E 6 8 8 5 6 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 1838
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
U 03 19 37 70
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2018-08-01
சீட்டிழுப்பு இலக்கம் 30
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 01 29 43 82
தேசிய லொத்தர் சபை

## வன்முறையை...

முடியாத நிலையில் அச்சத்துடன் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக பொலிஸாருக்கு அனைத்து தரப்பினரிடமிருந்து பாரிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதுடன் குற்றச் செயல்களை உடனடியாக நிறுத்துமாறு கோரப்பட்டது.

இந்நிலையில் குடாநாட்டில் இடம்பெறும் வன்முறைச்சம்பவங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக யாழ்ப்பாணம், மானிப்பாய், கோப்பாய், சுன்னாகம் ஆகிய பகுதிகளுக்குரிய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸாரின் விடுமுறை கால வரையறையின்றி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இருந்து மேலதிகமாக 100க்கும் மேற்பட்ட பொலிஸார் யாழ் குடாநாட்டுக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். மேலும் விசேட அதிரடிப்படையினரை இரவு நேரங்களில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இன்னும் சில நாட்களுக்குள் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் பாரபட்சமின்றி கைது செய்யப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-9)

## பொலித்தீன்,....

டிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படும் என யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார்.

நல்லூர் உற்சவகால முன்னாயர்த்த நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் கலந்துரையாடல் நேற்று மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது. அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் செப்ரம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த புனிதமான நாளில் எமது ஆடம்பரங்களை வெளிப்படுத்துவது இல்லாமல் எமது பண்பாட்டு, கலாசார விழுமியங்கள் மாறாமல் திருவிழாவை முன்னெடுக்க வேண்டும். அதற்காக இம்முறை எமது செயற்பாட்டுக் குழுவின் ஆலோசனைப்படி பல புதிய விடயங்களை முன்னெடுத்துள்ளோம்.

உலகில் உள்ள அனைத்து பாகங்களிலும் உள்ள தமிழ் மக்கள் கலந்து கொள்ளும் உன்னதமான திருவிழா இது. இத்திருவிழாவை மையப்படுத்தி யாழ் மாநகரத்தின் அபிவிருத்தி இலக்குகளை ஆரம்பிக்க வேண்டும். எமது நகரத்தை தூய்மையாக அடையாளப்படுத்தி சிறப்பாக இத்திருவிழாவை மேற்கொள்ள வேண்டும்என்பது எமது நோக்கமாகும்.

நடைபாதை வியாபாரத்துக்கு விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. போக்குவரத்து ஏற்பாடுகள் அனைத்தும் உரிய முறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மின்சாரம், நீர், சுகாதாரம் என்பன சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்படவுள்ளது.

ஆலய நிர்வாகத்தினர் ஆலய வளாகத்தை சுற்றி அமைக்கும் திரைச்சீலைக்கு உட்புறமாக அதிகூடிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளது. அதை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக நடைபாதை வியாபாரங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

மேலும் மிக முக்கியமாக உற்சவ காலத்தில் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கு பிரதியீடாக மக்கள் இலகுவாக பாவிக்கக்கூடிய பொருட்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். இவ்விடயம் தொடர்பில் சுற்றுச்சூழல் அதிகாரசபை சிறந்த சேவை வழங்க எம்மிடம் அனுமதி கேட்டுள்ளார்கள். இந்த நடைமுறை கடின மாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சுத்தமான பசுமையான நகரை உருவாக்கும் தொனிப்பொருளில் இந்த திருவிழா நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளோம் எமது இல க்கை அடைய இது ஒரு சந்தர்ப்பமாக எமக்கு அமைந்துள்ளது.

மக்களுக்கு அச்சத்தை தற்போது ஏற்படுத்தும் போதைவஸ்து பாவனை இருக்கிறது. இந்த உற்சவகாலத்தில் உச்சக்கட்டமாக கண்காணிக்கப்படவுள்ளது. விசேட கம ராக்கள் 30க்கும் அதிகமாக பொருத்தப்படவுள்ளது. அத்து டன் பொலிஸாரின் கண்காணிப்பு இம்முறை அதிகமாக இருக்கும். சிவில் உடையிலும் பொலிஸார் கடமைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் குறிப்பாக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளது. அதாவது ஆலய வளாகத்துக்குள் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஒளிப்பதிவு நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன, பச்சை குத்தும் நிலையம் அமைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது, தெய்வங்களின் உருவப்படங்கள் அச்சிட்டு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. உணவுகளை வாங்கி சென்று ஆலய வளாகத்தில் வைத்து உண்ணுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சிறந்த மாநகரம் என்ற பெயருடன் பொது மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது எமது முக்கிய நோக்கம், எனவே வியாபாரிகள், பொதுமக்கள், ஊழியர்கள் முழு ஒத்துழைப்புடன் நடந்து சிறந்த முறையில் புனிதத்தன்மையுடன் இந்த திருவிழா காலத்தில் செயற்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)


**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**



(C-3289)
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்
UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 1100/-
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
077 755 4528
3-5 Working Days
DHL aramex SKYNET

**வேலைவாய்ப்பு**

யாழில் பிரபலமாக இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச கம்பனிக்கு துடிப்புமிக்க இளைஞர், யுவதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
● அனுபவம் பயிற்சியின் மூலம் வழங்கப்படும்.
● பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● கல்வித்தகைமை O/L. ● தங்குமிடம், உணவு இலவசம்.
● 20 பேருக்கு மட்டும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
தொடர்பு: 0771571699
(C-3407)

O/L உடன் 6 மாதத்தில்
வீட்டுக்கு எந்தச் செலவும் இல்லாமல் விரும்பிய நாடு செல்லும் ஏற்பாட்டுடன்
**ஹொட்டேல் பயிற்சி**



(C-3406)
அமெரிக்க Mc Donalds, Marriot, Sheraton உட்பட முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களின்
டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் கிளைகளில்
வேலைவாய்ப்புடன் விசா
26 ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா ஏற்பாட்டுடன் வேலைவாய்ப்பு
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கனடா விசா
வேலைவாய்ப்பு விசாக்கள், ஏற்கனவே விசா வென்றவர்களின் விபரங்களை நேரில் பார்வையிட்டு விண்ணப்பம் செய்யலாம்!
SIKARAM ACADEMY
Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
www.sikaram.lk
0777 324 004
021 221 9 221
SIKARAM ACADEMY
221 - 1/1. மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்


# நீங்கள் செய்தியாளர்களாக விரும்புகிறீர்களா?

## உங்களின் விருப்பத்தை நிறைவேற்ற உங்கள் வலம்புரி நாளிதழ் தயாராக இருக்கிறது

- உங்களுக்கு தெரிந்த செய்திகள்
- நேரில் கண்ட சம்பவங்களின் புகைப்படங்கள்
- நீங்கள் அறிந்த கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள்.
- வேலைவாய்ப்புகள்
- உயர் பட்டப்படிப்புகளுக்கான புலமைப் பரிசில்கள்
- இன்னும் பற்பல செய்திகள் தகவல்கள் மக்களை சென்றடைய வலம்புரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கான வழிவகைகள் நாளை இதே இடத்தில் பார்க்கத் தவறாதீர்கள்...**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.